Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா

ஜீவாகாரம்



அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1428) T.P.-2223565

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 26 (24.09.2003) புதன்கிழமை இதழ்: 354

# படையினரின் கெடுபிடிக்கு மத்தியில்
# வவுனியாவில் இன்று 'பொங்கு தமிழ்'

(வவுனியா)

**"எமது நிலம் எமக்கு வேண்டும். இராணுவத்தினரே நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்ல நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்பதை வலியுறுத்தி, இன்று வவுனியாவில் 'பொங்கு தமிழ்' நிகழ்வு உணர்வு பூர்வமாக நடைபெறவுள்ளது.**

இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் பொதுச்சுடர் ஏற்றலுடன் 'பொங்கு தமிழ்' நிகழ்வு பேரெழுச்சியுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து - தேசியக் கொடியேற்றல், மௌன அஞ்சலி, என்பன இடம்பெற்று, 'பொங்கு தமிழ்' நிகழ்வை நினைவுபடுத்தும் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டு, 'பொங்கு தமிழ்' பிரகடனம் வாசிக்கப்படும். தலைமையுரையைத் தொடர்ந்து பிரமுகர்கள் உரையாற்றுவர்.

'பொங்கு தமிழ்' நிகழ்வையொட்டி வவுனியா நகர் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. நகரின் அனைத்துப் பகுதிகளும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

வீதிகள் எங்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கான வாசகங்கள் அடங்கிய பதாகைகள், அலங்கார வளைவுகள் என்பன கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை - 'பொங்கு தமிழ்'

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய வெளிவிவகார அமைச்சர் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பார்?

கனடாவின் வெளிவிவகாரம் மற்றும் சர்வதேச வர்த்தகத்துறை ஆகியவற்றுக்குப் பொறுப்பான மத்திய அமைச்சராக விளங்குகின்ற பில் கிரஹம், அடுத்தமாதம் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு மேற்குலக நாடுகளின் தூதர்கள், ஜப்பானிய விசேட தூதர் அகாஷி, நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்கள் என பல சர்வதேச பிரமுகர்களையும் நேரில் சந்திப்பதை அண்மைக் காலமாகத் தவிர்த்து வரும் தேசியத் தலைவர், கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹமைச் சந்தித்து நல்லெண்ணப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாகக் கருதப்படுகிறது.

தற்போதைய சூழலில் பொருத்தமற்ற அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்படும் சர்வதேச பிரமுகர்களைச் சந்திப்பதை ராஜதந்திரக் காரணங்களுக்காகத் தவிர்த்து வருகின்ற தலைவர் பிரபாகரன், கனேடிய அமைச்சரைச் சந்திப்பதையும் தவிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சனங்களின்ர எழுச்சிக்கு முன்னால எவரும் வாலாட்டேலாது...!

## புலிகளின் அயர்லாந்துக் கூட்டத்தில் கியுபெக் முன்னாள் சட்ட அமைச்சரும்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல் சட்ட விவகாரங்களை ஆராய்ந்து ஆலோசனைகள் வழங்கி வருகின்ற அறிஞர்கள் குழுவின் இரண்டாவது ஆய்வுக் கூட்டத்தொடர், இந்த வார இறுதியில் அயர்லாந்தின் டப்ளின் நகரில் நடைபெறும்போது, கனடாவின் கியூபெக் மாகாண முன்னாள் சட்ட அமைச்சரும் சட்டத்துறைப் பேராசிரியருமான பிரெஞ்சுக் கனேடியரான ஜில் ரெமிலியாட் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசியல் சட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகளின் அறிஞர் குழுவின் முதலாவது கனேடியப் பிரதிநிதி என்ற பெருமையைப் பெற்றுள்ள ஜில் ரெமிலியாட், இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள இவ்வார இறுதியில் அயர்லாந்தின் தலைநகர் டப்ளின் பயணமாகிறார்.

சமாதான முயற்சிகளில் நேர்மையாக ஈடுபட்டு வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகளுக்குச் சர்வதேச மட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் கொலைச் சந்தேக நபரை யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவு பிறப்பித்தார் நீதிவான்!

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக

சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## புலிகளின் கிழக்குத் தளபதிகள் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்!

### தீர்வு யோசனைகள் குறித்து தலைவருடன் ஆராய்வர்

## நிமலராஜன் கொலைச் சந்தேக நபரை

# யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவு பிறப்பித்தார் நீதிவான்!

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரை யாழ். நீதி மன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நிமலராஜன் கொலையோடு தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் திருகோணமலை செல்வ புரத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் உதயபவன் என்பவர் கடந்த 5 ஆம் திகதி அங்கு வைத்து குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் தியாகேந்திரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை கொழும்பு மகஸின் சிறைச் சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.


நேற்று நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை யாழ்.நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மன்றில் ஆஜரான சந்தேகநபரின் தாயார் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் சந்தேகநபர் கடுமையாகத் தாக்கப்பட்டதாக முறையிட்டார்.

சந்தேக நபரைப் பொலிஸார் தாக்கியிருப்பின் அது அடிப்படை மனிதஉரிமையை மீறுல் செயலெனத் தெரிவித்த யாழ்.நீதவான் இ.த.விக்னராஜா, சந்தேக நபரை கொழும்பு சட்டவைத்திய அதிகாரியைக் கொண்டு வைத்திய பரிசோதனைக்கு உட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கிழக்குத் தளபதிகள் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்!

## தீர்வு யோசனைகள் குறித்து தலைவருடன் ஆராய்வர்



வன்னி வந்த தளபதிகளை அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வரவேற்று அழைத்துச் செல்கிறார்.

(கிளிநொசசி)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் அழைப்பின் பேரில், கிழக்கு மாகாணத் தளபதிகள் நேற்று வன்னி வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா, திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல பதுமன் மற்றும் வினோதன் படையணித் தளபதி தாத்தா, மட்டு அம்பாறை மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கீர்த்தி ஆகியோரே வன்னி வந்த தளபதிகளாவர்.

விசேட ஹெலிகொப்டரில் நேற்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி வந்த இவர்கள், இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாக தலைவர் பிரபாகரனுடன் கலந்துரையாடலில் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு படையினர் உதவி தேவைப்படவில்லை

## பணிப்பாளர் சதுர்முகம் கூறுகிறார்

சுகாதார ஊழியர்களது வேலை நிறுத்தப் போராட்டத்தால் யாழ். போதனா வைத்தியசாலையின் சில பணிகள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், படையினரை உதவிக்குக் கோர வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க வில்லை என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சதுர் முகம் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியசேவைகள் சுமுகமாக நடைபெற படையினரைச் சேவையில் ஈடுபடுத்தி உதவ யாழ்.மாவட்ட படைத்தலைமை முன்வந்துள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு பகுதி ஊழியர்களது வேலை நிறுத்தப் போராட்டத்தால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அதியுயர்பாதுகாப்பு வலய மக்கள் மீள்குடியமர அழுத்தம் கொடுங்கள்

## ஐ.நா. செயலர் கோபி அனானுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில், உயர் பாதுகாப்பு வலயங்களை இராணுவம் அமைத்துள்ளதால் அந்தப் பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்கள் பலர் குடியமரமுடியாதுள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு, வலி. வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1423)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள்

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி மீள போராட்டத்தை ஆரம்பித்தனர்

பகுதிநேரமாகக் கடமைபுரியும் ஆங்கில ஆசிரியர்கள், தம்மை நிரந்தரமாக்கக்கோரி- மீளவும், தமது சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் - திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் முன், இந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

தமக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், மற்றவர்களாலும் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாதமையால் தாம் இந்தப் போராட்டத்தினை ஆரம்பித்ததாக இவர்கள் தெரிவித்தனர்.

தமக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்காது விட்டால், மாகாண கல்வித் திணைக்களத்தினை இயங்கவிடாமல் செய்வதோடு, தமது சுழற்சி முறை உண்ணாவிரதத்தினை, உண்ணாவிரதமாக மாற்றுவோம் எனவும் இவர்கள் தெரிவித்தனர்.

இந்த மாத முதலாம் திகதி இவர்களது போராட்டம் ஆரம்பித்து மூன்றாம் திகதி மறியல் போராட்டமாக விரிவுபடுத்தப்பட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எட்டாம் திகதி பிரதமரைச் சந்தித்து நல்ல முடிவைத் தருவதாகத் தெரிவித்தபோதும், எதுவித முடிவுகளும் அவர்களால் - பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாமையினாலேயே, இவர்கள் தமது போராட்டத்தினை மீள ஆரம் பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (04,10)



யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பவள விழாவையொட்டிய அங்குரார்ப்பண விழாவில் - பாடசாலை அதிபர் கொடியேற்றுவதையும், அருகில் நல்லை ஆதீன முதல்வர் மற்றும் விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## விதவைகளுக்கு வட்டியில்லா கடன்

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கில் - இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக உழைப்பாளர்களை இழந்த 30 விதவைகளுக்கு - வடமராட்சி கிழக்கு கடற்தொழில் கூட்டுறவுச் சங்க சமாசத்தினர், வட்டியில்லா கடன்களை வழங்கிவருகின்றனர்.

மேற்படி நிறுவனத்தினரால் - 20 விதவைகளுக்கு, தலா 15 ஆயிரம் ரூபாவும், ஏனையோருக்கு ரூபா 25 ஆயிரம் ரூபாவும், சுயதொழிலை மேற்கொள்வதற்கு கடனாக வழங்கப்பட்டது.

## ஞானச்சுடர் வெளியீடு

(வடமராட்சி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால், மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் இதழின் புரட்டாதி மாத வெளியீடு - எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு, பேரவைத் தலைவர் தலைமையில் நடைபெறும்.

## திருத்தி வாசிக்கவும்

இன்றைய மாணவர் அரங்கப் பகுதியில் - க.பொ.த. (சா/த) வகுப்புக்குரிய தமிழ்மொழியும் இலக்கியமும் வினாத்தாள் ஆசிரியர், **Sp.Trd. Tamil** சி.சரவணபவானந்தன் கொக்குவில் இந்துக்கல்லூரி என்று பிரசுரமாவதற்குப் பதிலாக, கனகேஸ்வரன் என்று தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. திருத்தி வாசிக்கவும்

# திலீபனின் நினைவு ஊர்தி இன்று வலி. மேற்குக்கு!

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி மக்கள் அஞ்சலிக்காக வலிகாமம் பிரதேசத்திற்கு செல்லவுள்ளது.

இன்றுகாலை 9 மணிக்கு தொட்டிலடி, சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, அராலி வடக்கு, செட்டியாமடம் சந்தி, துணைவிச்சந்தி, சங்கரத்தை சந்தி, மாவடிச்சந்தி, மூளாய் சந்தி, சுழிபுரம் சந்தி, சித்தன்கேணி ஆகிய இடங்களுக்கு செல்லவுள்ளது.

அத்துடன் தீவகக் கோட்டத்தில்- ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலிலிருந்து புறப்படும் நினைவு ஊர்திப் பவனி, வேலணை துறையூர் ஊடாக புங்குடுதீவு மடத்து வெளியைச் சென்றடையும். அங்கிருந்து பிரதான வீதியூடாக குறிஞ்சிக்காடு, ஆலடிச் சந்தி, சந்தையடி, பெருங்காடு, நம்பர் கடைச் சந்தி வரை செல்லும்.

பின்னர் புங்குடுதீவில் இருந்து வேலணை துறையூர், அம்பிகை நகர் ஊடாக சுருவிலைச் சென்றடையும். தொடர்ந்து புளியங்கூடல், சின்னமடு, நாரந்தனை, பாலக்காட்டுச் சந்தி, மெலிஞ்சிமுனை, கரம்பன், ஊர்காவற்றுறை, நம்பாட்டி கிராமங்களுக்குச் சென்று நாரந்தனை வடக்கு, பிரதானவீதி சரவணைவரை சென்று ஊர்காவற்றுறை வடக்கு வீதியூடாக தீவகக்கோட்ட அரசியல்துறைச் செயலகத்தைச் சென்றடைந்து நாளை 8 மணிக்கு பணணைவீதியூடாக யாழ் நகருக்கு வந்து சேரும்.

நாளை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேசம், சித்தன்கேணி சந்தி, சில்லாலை, பண்டத்தரிப்பு, விளான்சந்தி, தொட்டிலடி சந்தி, மாசியப்பிட்டி, சீரணிச்சந்தி, மானிப்பாய், பிப்பிலி சந்தி, நவாலி, ஆனைகோட்டை, உயரப்புலம், சுதுமலை, தாவடிச் சந்தி ஆகிய இடங்களுக்கு செல்லும் என, தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பிரிவினர் தெரிவித்தனர்.

## இலங்கைக்கும் பஹ்ரேனுக்குமிடையில்

# ஒன்றிணைக்கப்பட்ட ஆணைக்குழு அமைப்பதற்கு இணக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் பஹ்ரேனுக்குமிடையே பொருளாதார - வியாபார மற்றும் சமூகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கும், குடியகல்வு தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களுக்காக சிறந்ததோர் சூழலை உருவாக்குமுகமாகவும், இரு நாடுகளுக்குமிடையே ஒன்றிணைக்கப்பட்ட ஆணைக்குழு ஒன்றினை உருவாக்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார மற்றும் நிதி உடன்படிக்கைகளுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பாக இந்த ஒன்றிணைக்கப்பட்ட ஆணைக்குழு மூலம் ஆராயப்படும்.

இலங்கைப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவும் பஹ்ரேன் நாட்டு பிரதம மந்திரியும் வெளிநாட்டு அமைச்சருமான ஷேக் மொஹமட் பின் முபாரக் அல் கலியாவும் இது தொடர்பான இணக்கப்பட்டிற்கு வந்துள்ளனர்.

# அரசாங்க அறிவித்தல்

## கூறுவிலை கோருதல்

மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக, பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு இப்பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| பொருட்களின் பெயர் | தொகை |
|---|---|
| 1. Computer Specification - P 4 | 10 |
| ❐ Make - DELL Branded (Desktop Casing) | |
| ❐ Processer - Intel P4 2.4GHz Mobile | |
| ❐ Front size bus speed - 400 MHz | |
| ❐ Intel Original motherboard with Intel chipset | |
| ❐ 256 DDR RAM | |
| ❐ 40 GB or 60 GB Hard disk | |
| ❐ 32 MB Memory VGA Adaptor | |
| ❐ Floppy Disk Drive | |
| ❐ DVD Rom | |
| ❐ 2USB, 2 Serial & 1 Parallel | |
| ❐ AGP & 3 PCI slot | |
| ❐ Network card | |
| ❐ Sound Card - 32 bit | |
| ❐ Internal modem 56 kbps | |
| ❐ Speaker 1000W | |
| ❐ Monitor 15″ Color SVGA (or Higher) | |
| ❐ PS/2 Key board | |
| ❐ PS/2 Mouse | |
| ❐ Dust cover | |
| ❐ Filter Glass 15″ | |
| 2. Line - Interactive UPS 650 VA Fenton 600 VA Power Tree or Prolink | 10 |
| 3. Printer - Epson LQ 300+ | 05 |
| 4. Printer - HP Laser Jet 1300 | 01 |
| 5. Toner - HP Laser Jet 1300 | 05 |
| 6. Computer Table 4′ x1.8′ x2.5′ (wood) | 10 |
| 7. Computer Chairs (Revolving) | 12 |
| 8. Stabilizer Servo Type - 1000w (Goldsource) | 05 |

2. கூறுவிலைகள் சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கூறுவிலைப் படிவங்களை 2003.09.24 ஆம் திகதி தொடக்கம் 2003.09.29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கெள்ளலாம்.
3. கூறுவிலைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக ரூபா 5000.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டின் பிரதியை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்பட்டியலை இரு பிரதிகளில் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.09.29 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றையதினம் பி.ப. 2.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.
5. கூறுவிலைகள் உள்ளடங்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் முலையில் "மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பொருள்களின் கூறுவிலைகள" எனக் குறிப்பிடல் வேண்டும்.
6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலை கோரியவர் 3 நாட்களுக்குள் என்னால் வழங்கப்பட்ட வழங்கு கட்டளைகளுக்குப் பொருட்களை வழங்கல் வேண்டும்.
7. இவ் விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள பொருட்களின் மாதிரிகளுக்கும் தரங்களுக்கும் இணங்க இப்பொருட்களை வழங்கக்கூடியவர்கள் மட்டுமே இக்கூறுவிலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். வேறு மாதிரிகளும், தரங்களும் சமர்ப்பிக்கப்படின் அவை இரத்துச் செய்யப்படும் என்பதனை கூறுவிலை சமர்ப்பிப்பவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

**செ.பத்மநாதன்,**
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-1582)


நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜீத், லைலா நடித்த

தீனா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

ULTRA FORCE- 2

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டிராஜன் நடித்த

ராமச்சந்திரா

காட்சிநேரம் 10.30, 2.3C, 6.30. 9.30 (பு.நே)

(சி-1424)


# நல்லூர் பிரதேச சபை

## ஞானபண்டித வித்தியாசாலை வீதி சந்தைக்கடைகள்

## கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் கீழ்க்குறிப்பிட்ட கடைகள் 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 29.09.2003 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 30.09.2003 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரை நல்லூர் பிரதேச சபைத் தலைமைக் காரியலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

கேள்வி விபரம் :

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற் தவிர்ந்த) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கீ.மணி (வற் தவிர்ந்த) |
|---|---|---|---|
| கோக்குவில் சந்தை கடை - 1 | 500/- | 10 000/- | 360 000.00 |
| கோக்குவில் சந்தை கடை - 2 | 500/- | 5000/- | 144 000.00 |

கேள்வி நிபந்தனைகளையும் நடைமுறைகளையும் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
22.09.2003

(சி-1579)

செல்லையா செல்வரத்தினம்
*செயலாளர்*

## கொழும்பு நகரத்துக்கான
# மின்சார, நீர் விநியோகங்களை புலிகள் குறிவைக்கிறார்களாம்
### ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூறுகிறார்

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினருமான அனுருத்த ரத்வத்தை- மீண்டும் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தொடங்கியுள்ளார்.

பொ.ஐ.மு. அரசாங்கத்தின் வீழ்ச்சியின் பின்னரும், 2001 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் கண்டியில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை வழக்கில் - பிரதான சந்தேக நபர்களில் ஒருவராக குற்றஞ்சாட்டப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பின்னரும், இவர் கட்சி நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியேயிருந்து வந்தார்.

ஆனால், தற்போதைய அரசாங்கத்தின் மீதான நெருக்கடிகள் அதிகரித்து வருவதையடுத்து, புதிய ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் தென்படுவதையடுத்துமே, ரத்வத்தை மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபட ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கட்சியின் முக்கிய கூட்டமொன்றில், அவர் கருத்து வெளியிடும்போது, அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தளர்வுகள் ஏற்படுத்தியதால், பெருமளவு புலிகள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக வும், இவர்கள் மின்சாரம் மற்றும் நீர் விநியோகங்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# ஈழக்கோரிக்கையைக் கைவிட்டால் சில அதிகாரங்களை வழங்கமுடியும்!
### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழக்கோரிக்கையை கைவிட்டு, நாட்டை இரண்டாகப் பிரிக்கமாட்டோம் என்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பட்சத்தில், சில அதிகாரங்களை வழங்குவது பொருத்தமானது என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



பண்டாரவளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டது எனினும், நாட்டில் சமாதானம் நிலவுகின்றது என்று கூறமுடியாது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதார ஊழியர் வேலைநிறுத்தம்; கர்ப்பிணிப் பெண் பரிதாப மரணம்!

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக - கர்ப்பவதி ஒருவரும்,அவரது குழந்தையும் பரிதாபகரமாக இறந்தனர்.

இந்தத் துயரச் சம்பவம், கடந்த வெள்ளிக்கிழமை காலியில் நடந்தது.

பரமசிவம் மாரியம்மா என்ற பெண்ணே, இவ்வாறு சுகாதார ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக இறந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது -

மேற்படி பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்படவே, காலியிலுள்ள மகாமோதிரப் பிரசவ வைத்தியசாலைக்கு- கடந்த புதன்கிழமை கொண்டு சென்றபோது, அங்கு நின்ற வைத்தியர்கள் பிரசவத்திற்கு இன்னும் பத்து நாட்கள் உள்ளதெனக்கூறி, வைத்தியசாலையில் அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

இதனையடுத்து, யக்கலமுல்ல என்ற இடத்திலுள்ள தனது வீட்டுக்கு திரும்பிய இந்தப் பெண்ணுக்கு, கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை பிரசவம் நடந்தது. பெண்ணும், பிறந்த குழந்தையையும் வைத்தியசாலைக்கு காலை 7.15 மணிக்கு கொண்டுசெல்லப்பட்டனர். வைத்தியசாலையில இவர் அனுமதிக்கப்பட்டபோதும், ஒருவரும் இவரைக் கவனிக்காத காரணத்தால், அதிகளவில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டு இவர் மரணமடைந்தார்.

இறந்த பெண்ணின் சடலத்தினை வைத்தியசாலை நிர்வாகத்தினர் எந்தவித ஆவணங்களிலும் பதியாமல், பிரேத அறையினுள் வைத்துள்ளனர். கடந்த புதன்கிழமை வைத்தியசாலைக்கு பிரசவ வலியால் இந்தப் பெண் வந்தபோது - அவரை அனுமதித்திருந்தால் - இந்தப் பெண்ணையும், பிறந்த குழந்தையையும் காப்பாற்றியிருக்கலாம் என, மரணவிசாரணை அதிகாரியான ஆரம்பாவெல தெரிவித்தார்.

இந்தப் பெண் இறந்தபின்னர்- எதுவித பதிவுகளும் இல்லாமல், அவரது சடலத்தை பிரேத அறையினுள் வைத்தமையையிட்டு, மரண விசாரணை அதிகாரி - வைத்தியசாலை நிர்வாக இயக்குநரைக் கடுமையாக எச்சரித்துள்ளார்.

வைத்தியசாலை அதிகாரி ஒருவர், தகவல் வெளியிடுகையில் - இந்தச் சம்பவத்தையிட்டு தனது அனுதாபத்தை தெரிவித்த அவர், இந்த வைத்தியசாலை ஊழியர்கள் எவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை எனவும், ஆனாலும், இந்தச் சம்பவத்தில் ஊழியர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - சுகாதார சேவைகள் ஆணையாளர் நாயகம் டொக்டர் அதுலகரந்த லியனகே, இந்தச் சம்பவம் தொடர்பாக- கருத்து எதனையும் தெரிவிக்கத் தன்னால் முடியாதெனத் கூறினார். அத்துடன், மகாமோதிர வைத்தியசாலைப் பணிப்பாளர் கூட - இந்தச் சம்பவம் தொடர்பாக எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

# ஐ.தே.கவுக்கு எதிரான கூட்டணி; சுதந்திரக் கட்சி தயாராகிறது!

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக, பல கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி - இந்த மாதக்கடைசியில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு - குழுவொன்றை நியமிப்பதற்கு சிலதினங்களுக்கு முன்னர், ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பொங்கு தமிழ் நிகழ்வுக்காக வவுனியா எழுச்சிக்கோலம்!

வவுனியாவில் இன்று நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வை முன்னிட்டு, வவுனியா நகரம் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

வவுனியா நகரம்- மஞ்சள், சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், பொங்கு தமிழ் தொடர்பான பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

ஆங்காங்கே எழுச்சிப்பாடல்களும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை - பொங்கு தமிழ் நிகழ்வில் - 500 நடனக் கலைஞர்கள் பங்குகொள்ளும் நடன நிகழ்வு- பிரமாண்டமான முறையில் அரங்கேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய
# அமைச்சர் கண்ணப்பனை கைதுசெய்ய வாஜ்பாயிடம் ஜெயலலிதா கோரிக்கை!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய இந்திய மத்திய அமைச்சர் கண்ணப்பனைக் கைது செய்வதற்காக, அவரைப் பதவியிலிருந்து விடுவிக்குமாறு - தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக, அவர் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் - விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிய மத்திய அமைச்சரும், ம.தி.மு.கவின் நிர்வாகியுமான கண்ணப்பனை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க, அவரை மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றும் - தமிழக முதல்வர், பிரதமர் வாஜ்பாயைக் கேட்டுள்ளார்.

அமைச்சர் கண்ணப்பன் மீது, மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறுமேயானால், மாநில அரசு நடவடிக்கை எடுக்குமென்று, தமிழக முதல்வர் - இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காத்தான்குடி முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலுக்கு வருகைதந்தோரை - மட்டு.அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் வரவேற்பதையும், கலந்துரையாடலில் பங்குபற்றிய முஸ்லிம் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.

### கண்டியில் கிரனேட் வீச்சுக்கு பெண் காயம்!

(கொழும்பு)

கண்டி - கட்டுகஸ்தோட்ட, கிராமமொன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில், பெண்ணொருவர் காயமடைந்தார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவரே, கிராமமொன்றினுள் கைக்குண்டு வீசியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபரை- பொலிஸார் கைதுசெய்து, விசாரணைக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இலங்கை – இந்திய பாலம் திட்ட அறிக்கைகள் தயார்!

(கொழும்பு)

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாலத்தின் திட்டவேலைகள் பூர்த்தியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

40 கிலோமீற்றர் நீளமுடைய இந்தப் பாலத்தை அமைப்பதற்கான திட்ட அறிக்கை, கலிபோர்னியாவில் உள்ள பிரசித்திபெற்ற நிறுவனமான 'நெக்கன்ட்' நிறுவனத்தின் அதிகாரிகள், கடந்த வாரம் இலங்கை- இந்திய அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள இலங்கை பொறியியலாளர்களைக் கொண்டு, இந்தப்பாலம் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டது. இதற்காக, 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளது.

# பொலிஸாருக்கு எதிரான வழக்குகள்; துரிதப்படுத்த விசேட அதிகாரிகள் குழு

(கொழும்பு)

பொலிசாருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளை விசாரிக்க, விசேட அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனின் பணிப்புரையின் பேரிலேயே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மட்டும் - முப்பது பொலிஸ்காரர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு, உயர்நீதிமன்றத்திலும், சில வழக்குகள் - பொலிஸாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த வழக்குகள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தி, அவற்றை உடனடியாக தீர்ப்பதற்காகவே- சட்டமா அதிபர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

பொலிஸார் விசாரணைக் காலங்களின்போது, இடமாற்றம் பெற்றுச் செல்லும்போது - விசாரணைகளை தொடரமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொலிஸார் ஓய்வுபெற்றுச் செல்வதற்கு முன், பதவிக்காலத்தின்போதே- விசாரணைகளை நடத்த வேண்டியுமுள்ளது. இதனாலேயே, பொலிஸாருக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட கைதிகளைத் தாக்கி, சித்திரவதைப்படுத்தியதாகவும், சிலரைக் கொலை செய்ததாகவும் கூறியே, பெரும்பாலான இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# இலுப்பைக்கடவையில் நடமாடும் சேவை

(மன்னார்)

மன்னார் மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவினர், எதிர்வரும் 27 ஆம் திகதி - இலுப்பைக்கடவையில நடமாடும் சேவை ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இலுப்பைக்கடவை மகா வித்தியாலயத்தில், காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெறவுள்ள இந்த சேவையில் மக்களின் பல்வேறுப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகாணப்படவுள்ளதாகவும், எனவே, அந்தப் பகுதியில் வாழும் மக்கள் - இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றி, தங்களது அத்தியாவசிய பிரச்சினைகளைத் தீர்த்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். (201)

### விவேகானந்தர் புலமைப்பரிசில் திட்டம்

(திருகோணமலை)

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு தினத்தையொட்டி, நேற்று முன்தினம் திருமலை - உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடந்த நிகழ்வில் - க.பொ.த. உ/த பரீட்சையில் உயர்புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு விவேகானந்தர் புலமைப்பரிசில் திட்டத்தின்படி, மாதம் 500 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இந்த கொடுப்பனவு, ஒரு வருடத்திற்கு விபுலானந்தர் நூற்றாண்டு சபையினரால் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# மாவீரர்களின் தியாகத்தால் தான் இன்றைய நிலை தோன்றியுள்ளது

## துணைவேந்தர் மோகனதாஸ் உரை



(யாழ்ப்பாணம்)

திலீபனுடைய தீர்க்கதரிசனமான பார்வை, இன்று நிஜமாகியிருக்கிறது. திலீபன் போன்ற மாவீரர்களின் தியாகத்தினாலும், அர்ப்பணிப்பினாலும் இன்று இந்தப் பேச்சுவார்த்தையும், போர்நிறுத்தமும் உருவாகியிருக்கிறது. தியாகத்தின் வெற்றியில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். ஆனாலும், உண்மையான விடுதலை எமக்குக் கிடைக்கவில்லை. எமது விடுதலைப்போராடடம் தனது இறுதி இலக்கை இன்னும் எட்டவில்லை. மிகவிரைவில் அது எட்டப்படலாம். எனவே, அதுவரை நாம் ஒவ்வொருவரும் விடுதலைக்காகப் பாடுபடவேண்டும் என, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நடைபெற்ற தியாகி திலீபனின் நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே - அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மாவீரர்கள் ஒவ்வொருவரும் புதைக்கப்படுவதில்லை. அவர்கள் விதைக்கப்படுகிறார்கள். திலீபனுடைய அகிம்சைப் போராட்டமானது, எமது விடுதலை வரலாற்றிலேயே புதியதொரு அத்தியாயம். அவனுடைய அகிம்சை வேள்வி - எமது விடுதலைப் போராட்டத்திற்குப் புதியதொரு உத்வேகத்தைக் கொடுத்தது. உலக அரங்கிலே எமது இனத்தை முதன்மைப்படுத்தியது.

ஒவ்வொரு மாவீரரும் தியாக சிந்தனையோடு தம்மை இந்த மண்ணின் விடுதலைக்காக அர்ப்பணிக்கும்போது, எதிர்காலத்தைத் தனது கண்களால் காணமுடியாத நிலையிலேயே மடிகிறான் ஆனால், ஒவ்வொரு மாவீரருடைய நெஞ்சில் துணிவும், தெளிவான சிந்தனையும் இருந்தது. தன்னுடைய இலட்சியப் பயணம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்னும் எண்ணம் இருந்தது.

சிலர் இன்று எல்லாமே கிடைத்துவிட்டதாக எண்ணிக் கொண்டுள்ளார்கள். சுகபோக வாழ்வு கிடைத்துவிட்டால், சுதந்திரம் கிடைத்துவிட்டதாக எண்ணி அவசரப்படுகிறார்கள். உண்மையிலேயே, தற்பொழுது தான் எமது போராட்டம் ஆரம்பித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேயே, உலகமயமாக்கல் என்னும் விளைவு எம்மை விழுங்குவதற்குத் தயாராக இருக்கிறது. நாளுக்கு நாள் எமது நாட்டிற்கு வந்துபோகும் வெளிநாட்டவர்களால், பல கலாசார சீரழிவுகள் உட்புகுத்தப்படுகின்றன. எமது விழுமியங்களும், பழக்க வழக்கங்களும் சிதைக்கப்படுகின்றன. எமது முன்னோர்கள் கலாசார விழுமியங்களைக் கட்டிக்காத்து வாழ்ந்தார்கள். அதனாலேயே இன்று நாம் தலைநிமிர்ந்து நிற்கக் கூடியதாகவுள்ளது.

தற்போது பரவிவரும் கலாசார அழிவுகள் - எமது விடுதலைப் போராட்டத்தின் குறிக்கோளை மாற்றுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

எந்த இலட்சியத்திற்காகத் திலீபன் தன்னை அர்ப்பணித்தானோ, அந்த இலக்கை அடையும்வரை நாம் மாறவேகூடாது. எமது விடுதலைப் பயணம் நீண்டதூரமாக அமையலாம். எனவே, மக்கள் ஒவ்வொருவரும் தியாகமனப்பாங்கை வளர்த்து, இனவிடுதலைக்காகப் பாடுபடவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கல்வியங்காடு சந்தை அபிவிருத்திக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்!

## மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான நிதியின் மூலம் - காலத்தால் மிகவும் பழமை வாய்ந்த செங்குந்தா சந்தை (கல்வியங்காடு சந்தை) புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலையைக் கட்டம் கட்டமாக நிறைவேற்ற வேண்டியிருப்பதனால் - சந்தைக் கட்டடத்தின் சில பகுதிகளை இடித்து அகற்றி, அந்த இடத்தில் புதிய சந்தையை அமைக்கும் பணி தொடரவுள்ளது.

சந்தைக் கட்டடத்தின் சிறுபகுதி இடித்து அகற்றப்பட்டாலும், மேற்படி சந்தையில் வழமையான வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு ஏற்றவிதமாக தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த செயற்பாட்டினால் ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுத்து அபிவிருத்தி வேலைக்கு முழுமையான ஒத்துழைப்பினை சகல வர்த்தகர்களையும், மக்களையும், பாவனையாளரகளையும் வழங்கியுதவுமாறு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் கேட்டுள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் மணல் அகழ்விற்கு ஆறு மாதத்திற்கு அரச அதிபர் அனுமதி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காடு, குடத்தனை ஆகிய பகுதிகளில் ஆறு மாதங்களுக்கு மணல் அள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிப் பத்திரம் நேற்று முன்தினம் யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதனால், வடமராட்சி கிழக்கு புனரமைப்பு புனர்வாழ்வு நிறுவனத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புலோலி உபய கதிர்காமத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அன்றைய தினம் மணல் அகழ்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட 7 மணல் திட்டுகளும், கொழும்பில் இருந்து வந்த உயர் அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டு, கையாளப்படவேண்டிய நடைமுறைகள் பற்றி வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் இப்பிரதேசங்களில் நீண்டகாலத்திற்குத் தொடர்ச்சியாக மணல் அகழ்வு மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (122)

# சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - தமிழீழ கல்விக் கழகத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டத்தில்கடமைபுரியும் ஆசிரியர்களுக்கிடையில் கட்டுரைப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூபா 3000, 2000, 1000 மும், ஐந்து வலயங்களின் மட்டத்தில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்குத் தலா 500 ரூபாவும் பரிசிலாக வழங்கப்படும்.

இப்போட்டி எதிர்வரும். 27ஆம் திகதி காலை 10.30 மணிக்கு, கீழ் வரும் பாடசாலைகளில் நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம.வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும்.

ஆசிரியர்களும், அதிபர்களும் தமக்கு வசதியான ஏதாவதொரு பாடசாலையில் போட்டிக்குத் தோற்றலாம். பரிசில்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி சங்கத்தினால் நடாத்தப்படவிருக்கும் சர்வதேச ஆசிரியர் தினக் கூட்டத்தில் வைத்து வழங்கப்படும்.

சமுதாயத்தில் ஆசிரியர்களின் அந்தஸ்து, கல்விக்கு ஏற்பட்ட இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்த ஆசிரியர்கள், சர்வதேச மாற்றங்களுககேற்ப ஆசிரியர்கள் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். போன்றவற்றை அடக்கும் பரப்பில் கட்டுரைக்கான வினா அமையும் என, சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்தார்.

### வர்த்தக தொழிற்துறை மன்றத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றத்தின் திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நல்லூர் செம்மணி வீதியிலேயே தொழில்துறை மன்றக் காரியாலயம் திறந்து வைக்கப்படவுள்ளது.

### மின் இணைப்பு வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் கேணியடி வைரவர் ஆலயப் பகுதி குடியிருப்புக்களிற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக இந்த பிரதேச மக்கள் - மின்சாரசபை, யாழ்.செயலகம் ஆகியவற்றிக்கு முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட மேலதிக அர்ச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் - இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மின்சார சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குப்பிழான் பகுதிக்குப் பல மாதங்களிற்கு முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டும், இப்பகுதிக்கு மின் இணைப்பு வழங்கப்படாமை தொடர்பாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# விவசாயக் கண்காட்சி மாத இறுதிவரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கடந்த 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடைபெற்ற கண்காட்சியின் காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது.


யாழ். மாவட்ட விவசாய கால் நடை உற்பத்தித் திணைக்களங்கள் நடத்தும் இந்தக் கண்காட்சி - விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க - இந்த மாத இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில் - விவசாயம் சம்பந்தப்பட்ட பாடநெறிகள் அடங்கிய புத்தகங்கள் - கண்காட்சிக்காகவும், விற்பனைக்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன், பலஇன மிளகாய்ச் செடிகள், தக்காளிகள், புடோல், கத்தரி மற்றும் மரக்கறி வகைப் பயிர்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு சிறிது காலத்தில் பயன் தரக்கூடிய முருங்கை, கொய்யா, பப்பாசி போன்றனவும், அழிந்துவரும் ஆயுர்வேத மூலிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காட்சிக்கு வைக்கப்பட்டிருககும் மரக்கறி வகைத் தாவரங்கள், விவசாயப் பாவனைப் பொருட்கள் என்பன குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும், அவற்றைப் பெறவிரும்புவோர் பொருட்கள் முடிவடைவதற்கு முன்னர் பெற்றுக் கொண்டு பயனடையுமாறு பண்ணை முகாமையாளர் தெரிவித்தார்.



மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலைக்கு - பழைய மாணவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட அலுமாரியை, சண்டிலிப்பாய் கோட்ட பணிப்பாளர் க. தனபாலசிங்கம் திறந்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : சி.லயஸ்ருதி
முகவரி : திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்

ஆறாவது அகவையில்

பெயர் : கு.மைக்கல்,
முகவரி : ஜேர்மனி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------
பெற்றார் ஒப்பம்

26) மனிதனின் செவியில் ஒலியைக் கடத்திச் செல்லும் ஊடகம் முறையே வெளிச்செவி, நடுச்செவி, உட்செவி ஆகியவற்றில்

1. திண்மம், திரவம், வாயு.
2. வாயு, திரவம், திண்மம்.
3. திரவம், வாயு, திண்மம்.
4. வாயு, திண்மம், திரவம்.

27) பிரிவு நரம்புத் தொகுதி என்பது

1. மையநரம்புத் தொகுதியின் ஒரு பிரிவு.
2. இச்சைவழி இயங்கும் நம்புத்தொகுதி.
3. இதயத்துடிப்பு வீதத்தைக் குறைப்பது.
4. இதயத்துடிப்பு வேகத்தைக் அதிகரிப்பது.

28) AIDS நோய்பரவுவதற்கு மிகக்குறைந்த செல்வாக்குடைய காரணம்.

1. ஆண் பெண் உடலுறவு.
2. தன்னினப்பாலுறவில் ஈடுபடல்.
3. காற்று, நீர் போன்ற காரணி.
4. இரத்தம் ஏற்றல்.

29) எமது நாட்டில் பின்வரும் எப்பொருள் மின்பகுப்பு மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

1. சுண்ணாம்பு.
2. ஜிப்சம்.
3. சவர்க்காரம்.
4. குளோரீன்.

30) பின்வருவனவற்றுள் எது நெட்டாங்கலையாகும்.

1. றேடியோ அலை.
2. ஒளி அலை.
3. ஒலி அலை.
4. மீட்டியசுரமானிக் கம்பி.

சி. பாலச்சந்திரன்
வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 11

1. **எல்லா வினாவிற்கும் விடை தருக**

(அ) "கோவம் பசிய ஆத்தாதுடா தம்பி நீயென்ன செய்வா ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான".
1) யாரால்,
2) யாருக்கு,
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது.
4) கீறிட்ட வாக்கியத்தை எழுத்து நடையில் தருக.

(ஆ) "நின்றுணை நாயன் றன்பா னெருங்கியே யாரு மெய்ப்ப வென்றியே கொண்ட யானென் வீரமே காண வேண்டிற்"
1) யாரால்,
2) யாருக்கு ,
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது.
4) கீறிட்ட வாக்கியத்தின் பொருளைத் தருக.

(இ) "ஐயகேள் நாசதே சத்த ணாங்கமர் வெய்யரில் வெய்யன் யான"
1) யாரால்,
2) யாருக்கு ,
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது.
4) கீறிட்ட வாக்கியத்தின் கருத்து யாது?

(ஈ) "பற்றுமின் கடிதின் நெடும் பார்மிசை ஏற்றுமின்"
1) யாரால்,
2) யாருக்கு,
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது.
4) பார்மிசை என்பது?

(உ) "என்ன நடந்தது அண்ணே தயவுசெய்து எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லு"
1) யாரால்,
2) யாருக்கு,
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது.
4) இவ்வடிகள் கூறப்பட்ட பாடம் யாது?

2. **பின்வரும் பாடலின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, சிறப்பைக் கூறுக?**

(அ) மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்லம் அடைந்தபின் பண்புற
வோரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன்.

(ஆ) கண்ணெனுங் கணை கொண்டாறும் கடுவெனு மயில் கொண்டாறும்
பண்ணெனுங்குழல் கொண்டாறும் பருந்தன மலைகொண்டாறும்
வண்ணநுந்தானை கொண்ட வளர்மதி குடையிற்றுண்டத்
தெண்ணறும் பெண்மான் கூட்டமெழுந்தது பெருமானோடே.

(இ) வாடை குளிர்ந்த தெனில் வாடி விடாமோ
வாரும் கடல் முழுதும் ஓடி வலை வீச
பாடொன்றிரண்டகல முன்பகலும் ஆகும்
பாரும் கிழக்கிலொரு வெள்ளி ஒளிவீசும்.

(ஈ) பருந்துணப் பாட்டி யாக்கை
படுத்த நாள் பகைசூ றோடும்
மருந்தினும் இனிய மாமன்
மடிந்த நாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த நங்கை
இருள் செவி முக்கினோடும்
அரிந்த நாள் வந்திலா தான்
இனிச் செய்யும் ஆண்மையுண்டோ?

(உ) அன்னை யின்றி அருங் கானில் எய்திய
உன்னை ஓடி அரவம் கடித்தலின்
மின்னையும் உனையும் விற்ற வெவ்வினை
என்னை எவ்வணம் நொந்தனை ஏந்தலே!

3. **பின்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.**

(அ) இளையான்குடிமாறநாயனாரின் விருந்தோம்பலின் சிறப்பைப் பாட்டின் அடிகள் மூலம் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்பதைக் கூறுக.

(ஆ) சந்திரமதி மகனின் உடலைத் தகனம் செய்யமுற்பட்ட சமயம் ஏற்பட்ட நிகழ்வினைத் தருக.

(இ) துன்பங்களைச் செய்தவனின் துயரங்களுக்கு எல்லாம் இறுதி செய்பவனாம், அவனை வந்தடைந்தவன் கூறியவற்றைக் குருதர் சனப்படலம் மூலம் எடுத்துக் காட்டுக.

4. **பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.**

(அ) கவிதை உள்ளம் என்னும் பாடத்தில் காணப்படும் 'கொட்டைப் பாக்கன்ன சின்னக்குருவிகள்' என்னும் தொடரில் காணும் உவமான, உவமேயங்களைக் கூறுக.

(ஆ) மலையக மக்கள் வாழ்க்கையை அறியக்கூடிய வகையில், எழுதப்பட்ட நாவல்கள் சிலவற்றைக் கூறி, அதில் பொதிந்துள்ள வற்றை எடுத்துக் காட்டுக?

(இ) கண்ணுவ முனிவர் சகுந்தலைக்குக் கூறிய ஆசியுரைகள் யாவை?

5, 6, 7 **ஆம் வினாக்களில் எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடை தருக.**

5. (அ) மகனைக் காணாத அந்தோக் கிழவி, மகனைக் கண்டதும் அவர்களிருவருக்கும் இடையில் நடைபெற்ற சம்பாஷணைகள் யாவை?

(ஆ) அந்தோக் கிழவி தனது ஒரு வயதில் நடந்த ஓர் கதையைக் கூறுகின்றாள். அக்கதையைக் கூறுக?

6. (அ) காவியத் தலைவி கதீஜா நாயகி கண்ட கனவு இரண்டையும் கூறுக?

(ஆ) பெருமானார் கதிஜாவின் பெருமையை எவ்வாறு குறிப்பிட்டுக் கூறுகின்றார்?

7. (அ) பழையதும் புதியதும் என்னும் பாடத்தின்மூலம் நமக்குப் பொருந்தக் கூடிய கருத்துக்கள் யாவை?

(ஆ) "நடந்தது என்ன தம்பி எல்லாம் காலவித்தியாசம்" என்ற வார்த்தை கார்த்திகேசுவின் வாயினால் வந்த கருத்துக்கள் யாவை?

க. கனகேஸ்வரன்
Sp.Trd Science
கொக்குவில் இந்துக் கல்லூரி

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2003

**கீழே தரப்பட்டுள்ள விபரத்தை வாசித்து, இல. 01 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

டெங்கு - வீட்டுக்கு வீடு பரவுகிறது. இம்முறை, டெங்கு கொழும்புப் பிரதேசத்திலேயே அதிகளவில் பரவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நுளம்புகளை விரட்டுவதற்கும், அழித்து ஒழிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெற்றோர் தமது பிள்ளைகளின் பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் பல்வேறு பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். மாரிகாலத்துடன் டெங்கு நுளம்புகள் தொழிற்படத் தொடங்குகின்றன. டெங்கை ஒழிப்பதற்காக விசேட செயலணியும் அமைக்கப்பட்டுள்ளது.

காய்ச்சலுடன், தோலில் சிவப்பு புள்ளிகள் ஏற்படுதல் டெங்கின் அறிகுறியாகும். கியூபாவில் - அடிக்கடி வீடுகளைப் பரிசீத்து அறிக்கைப் படுத்துவதற்கு, குழுவொன்றினை அமைப்பதன்மூலம் - டெங்கு நோய் கட்டுப்படுத்தப்பட்டது. சிங்கப்பூரில் - குப்பை கூழங்களைக் குவிப்பவர்களுக்கு அபராதம் விதித்ததன்மூலம் டெங்கு கட்டுப்படுத்தப்பட்டது.

1. இம்முறை டெங்கு எங்கு பரவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது? ..........
2. டெங்கு நுளம்புகள் எப்போது தொழிற்படத் தொடங்குகின்றன? ..........
3. டெங்கு நோயின் அறிகுறி யாது? ..........
4. சிங்கப்பூரில் டெங்கு எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டது? ..........

**கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல் தருக.**

5. வீடு ..........
6. அபராதம் ..........

**கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.**

7. அழித்தல் ..........
8. மாரி ..........

**மேலேயுள்ள பந்தியிலுள்ள உயர்திணைச்சொல் இரண்டு தருக.**

9. ..........
10. ..........

**இவ்விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்திணைச்சொல் இரண்டு தருக.**

11. ..........
12. ..........

**மேலுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நாடுகளின் பெயர்களை எழுதுக.**

13. ..........
14. ..........

**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்தில்) தருக.**

15. பெற்றோர் ..........
16. சிவப்பு ..........
17. காய்ச்சல் ..........
18. பிள்ளைகள் ..........

**கீழே தரப்பட்டுள்ள கடிதத்தினை வாசித்து, இல. 19 முதல் 26 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

பூங்கா ஒழுங்கை,
திருநகர்.

அன்புள்ள பாரி,

அண்மையில் ஒரு நாள் நான் பொது நூலகத்தில் புத்தக மொன்றைக் கண்ணுங்கருத்துமாக வாசித்துக் கொண்டிருந்தபோது, நிர்மலன் அங்கு வந்தான். என்ன ஆச்சரியம். அவன் என்னோடு கதைத்தான். விளையாடுவதற்கு நல்ல மைதானம் ஒன்று அங் கிருப்பதாகக் கூறினான். வருகின்ற ஞாயிற்றுக்கிழமை நிர்மலனின் வீட்டுக்கு நான் போகிறேன். உனக்குத் தெரிந்த எனது சித்தப்பாவின் மகனான வாசீசனும் அங்கு வருவதாகக் கூறினான். நீயும் அங்கு போவதற்கு வா.

இப்படிக்கு,
அன்புள்ள,
மோகன்.

19. கடிதம் எழுதும்போது இடம்பெற வேண்டிய முக்கிய அம்சம் ஒன்று இல்லை. அது யாது என எழுதுக? ..........
20. இக்கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டது? ..........
21. இங்கு காணப்படும் இணை மொழித் தொடர் ஒன்றை எழுதுக? ..........
22. பொது நூலகப் புத்தகத்தை மிகக்கவனமாக வாசித்தவன் யார்? ..........
23. நிர்மலனின் வீட்டுக்கு மோகன் எப்போது போவதாகக் கூறினான்? ..........
24. மோகனின் சித்தப்பாவின் மகனின் பெயரென்ன? ..........

**ஒத்த சொல் தருக.**

25. அன்மை ..........
26. மகன் ..........

**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.**

27. HOUSE ..........
28. PLAY ..........
29. LIBRARY ..........
30. SUNDAY ..........

**இல. 30 முதல் 40 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

31. நீலச் சாயத்துடன் சிவப்புச் சாயத்தைக் கலப்பதால் ஊதா நிறத்தைப் பெறமுடியும். ( )
32. மீன் பூவினால் சுவாசிக்கிறது. ( )
33. பருத்தி- காற்றினால் பரவிப் பெருகும் தாவரமாகும். ( )
34. நிழல் -மத்தியானம் 12 மணிக்கு மிகநீண்டதாக இருக்கிறது ( )
35. உலோகப் பொருட்கள் வெப்பத்தை கடத்துவதில்லை. ( )
36. வெண்புறா சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. ( )

37. அடிப்படைத் திசைகளில் ஈசானமூலையும் ஒன்றாகும். ( )
38. துணித்துண்டுகள் இரண்டைப் பொருத்துவதற்குப் பயன்படுவது சங்கிலித்தையலாகும். ( )
39. இன்று சாதாரண தபால் ஒன்றை அனுப்புவதற்கு ரூபா 4.00 சதமுத்திரைகளை ஒட்டவேண்டும். ( )
40. குறிஞ்சாய் ஒரு மேவோட்டித் தாவரமாகும். ( )

### இல. 41 முதல் 48 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையின்கீழ் கோடிடுக.

41. தவிடு அதிகமுள்ள சோற்றில், அதிகளவு இருக்கும் போசணை பதார்த்தம்.
1. மாப்பொருள் 2. உயிர்ச்சத்து B
3. உயிர்ச்சத்து C 4. கல்சியம்


42. உதைபந்தாட்டக்குழுவில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை.
1. ஆறு 2. ஏழு
3. பத்து 4. பதினொன்று

43. இரவு நேரங்களில் நடமாடும் பறவை
1. கொக்கு 2. கோழி
3. பெரிய ஆந்தை 4. ஆள்காட்டிக்குருவி

44. நாருரு வேருள்ள தாவரம் எது?
1. தென்னை 2. வேம்பு
3. மா 4. பலா

45. கடதாசி ஒன்றைச் சூரிய ஒளியினால் எரிவதற்கு உதவும் சாதனம்
1. தளவாடி 2. கைவில்லை
3. குவிவாடி 4. குழிவாடி

46. மழைமானி அமைப்பைச் சரிவரக் காட்டும் உரு எது?




(1) (2) (3) (4)

47. மின்குள் பிரகாசமாக எரிவதற்கு மின்கலங்கள் எவ்வாறு இணைக்கப்பட வேண்டும்.
1. தொடர்நிலை 2. சமாந்தரநிலை
3. ஐதாக 4. செறிவாக

48. மனித உடலின் சாதாரண வெப்பநிலை சதம மீற்றில் எவ்வளவு?
1. 98°C 2. 37°C
3. 98.4°F 4. 37°F

### இல. 49-52 வரையுள்ள வினாக்களில், உருக்களின் பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.



(1) (2) (3) (4)

.......................................................................

### அடைப்பினுள் உள்ள சொற்களிலிருந்து திருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து, இல. 53-60 வரையுள்ள வினாக்களில் கீறிட்ட இடங்களை நிரப்புக.


| |
|---|
| டைனமோ, யாழ்ப்பாணம், மின் உயர்த்தி, வாழை, விகாரை, தேவாலயம், இருபத்தாறு, கோயில், மல்வானை, அம்பாந்தோட்டை, கனவுரு. |

53. உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?
.......................................................................
54. சைக்கள் விளக்கிற்கு மின்சக்தி வழங்கும் உபகரணம் எது?
.......................................................................
55. பௌத்த சமயத்தவரின் சமய வழிபாட்டு இடத்தின் பெயர்?
.......................................................................
56. றம்புட்டான் பழத்திற்குப் பெயர் போன இடம் எது?
.......................................................................
57. இலங்கையில் உப்பு விளையும் இடம்?
.......................................................................
58. தீப்பெட்டியின் வடிவம் யாது?
.......................................................................
59. ஆங்கில மொழியிலுள்ள எழுத்துக்கள் எத்தனை?
.......................................................................
60. முக்கனிகளில் ஒன்று?
.......................................................................

### இல. 61 முதல் 70 வரையுள்ள வினாக்களுக்கு விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

61. பின்வரும் எண் நிரலில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 100 | 90 | 80 | 70 | ........ | ( ) |

62.  இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை, முழு உருவின் பின்னமாக எழுதுக.
.......................................................................

63. ஒரு இனிப்புப் பானத்தின் கனவளவு 175ml ஆகும். இவ்வாறான 6 போத்தல் இனிப்பு பானத்தின் கனவளவு யாது?
.......................................................................

63. கீழே தரப்பட்டுள்ள விபரங்களைக் கவனமாக அவதானித்துப் பரீட்சை நேர அட்டவணையின் வெற்றிடங்களை நிரப்புக.

| பரீட்சை நேர அட்டவணை | | |
|---|---|---|
| தொடக்கம் | வரை | |
| மு.ப. 8.30 | --------- | வினாத்தாள் 1 (45 நிமிடங்கள்) |
| --------- | மு.ப. 9.45 | இடைவேளை (30 நிமிடங்கள்) |
| மு.ப. 9.45 | --------- | வினாத்தாள் (75 நிமிடங்கள்) |

## சென்றவார வினாக்களுக்குரிய விடைகள்

(1) 3
(2) 1
(3) 1
(4) 2
(5) 1
(6) 3
(7) 2
(8) மீன்கள்.
(9) கற்களில்.
(10) கொக்கு.
(11) சினம் - ஆத்திரம்.
(12) சேய்மை.
(13) மீன்.
(14) இரண்டாவது.
(15) இதயம் படபடத்தல், உடம்பு நடுங்குதல், கண்ணீர் பெருகுதல், பயத்துடன் வாழ்தல்.
(16) துணிவு.
(17) நண்பர்.
(18) தந்தையில் + இருந்து.
(19) வெடி + தாக்குதல்.
(20) காட்டில் உலாவித்திரியும் முறைபற்றியும், பகைவர்களிடம் இருந்து தப்பும் முறை பற்றியும்.
(21) பகைவரின் வெடிக்கு.
(22) முன்னங்கால்.
(23) இறந்தகாலம்.
(24) பத்தாயிரம்.
(25) 22
(26) TELEPHONE.
(27) DOCTOR.
(28) STUDENTS.
(29) MY
(30) 2032
(31) 3
(32) 3
(33) 2
(34) 3
(35) A,C.
(36) பாண், குதிரை.
(37) சைக்கிள் / குதிரைவண்டி / தோணி / ஆகாயவிமானம்.
(38) பிளேன் / ஆகாயவிமானம்.
(39) உயிர்ச்சத்து C.
(40) D,H (வாழைப்பழம், அப்பிள் பழம்).

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd
ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

## மாதிரி வினாத்தாள் - 2003 விஞ்ஞானம்

மணித்தியாலயம்

01. அடர்த்தியின் சர்வதேச அலகு யாது?
1. $Ag\ cm^3$ 2. $Kgm^{-3}$
3. $Nm^{-2}$ 4. $Nm^3$


02. 20 Kg திணிவு 10 $m^2$ பரம்பலில் வைக்கப்பட்டால், ஏற்படும் ஏற்படும் அமுக்கம் $Nm^{-2}$ இல்
1. 20/10 2. 20x10/10
3. 10/20 4. 10x10/20


03. பின்வருவனவற்றில் நிறமுள்ள சேர்வை
1. $NaNo_3$ 2. $CuSo_4$
3. $Kno_3$ 4. $PbSo_4$

04. பின்வரும் எது Ne இன் இலத்திரன் நிலையமைப்பை ஒத்தது அல்ல.
1. $Na^+$ 2. $Mg^{2+}$
3. $O^-$ 4. $Al^{2+}$

05. ஒலி முதல் ஒன்றின் சுருதியை அதிகரிக்கும் முறை அல்லாதது
1. வீச்சத்தை கூட்டல்.
2. அதிர்வெண்ணைக் கூட்டல்.
3. நீளத்தைக் குறைத்தல் .
4. குறுக்கு வெட்டைக் குறைத்தல.

06. பின்வரும் ஒளிக்கதிர் தடங்களில் பிழையானது
1. 2. 3.




07. 

இத்தொகுதியின் பொறிமுறை நயம் யாது?
1. 15/8 2. 14/8 3. 2 4. 15/16

08. ஆகாய விமான பயணத்தில் மிட்டாய் வழங்குவதற்குக் காரணம்.
1. வாய் வரட்சியாகாது உமிழ்நீர்ச் சுரப்பைத் தூண்ட.
2. நடுக்காதிலும் புறக்காதிலும் அழுக்கத்தைப் பேண.
3. வளிமண்டலத்தால் ஏற்பட்ட அசௌகரியத்தைக் குறைக்க.
4. மீண்டும் மீண்டும் விமானத்தில் பயணம் செய்யத்தூண்ட.

09. பின்வருவனவற்றில் நிறமற்ற வாயு எது?
1. $No_2$ 2. $H_2s$ 3. $Cl_2$ 4. $3r_2$

10. x இற்கும் y இற்கும் இடையேயான சம வலுத்தடை யாது?



1. 6 Ω 2. 3 Ω
3. 10 Ω 4. 9

11. 

A B C


குறியீடுகள் A,B,C என்பவை குறிப்பது முறையே


1. ஒடுக்கி, கொள்ளளவை, தடை.
2. மாறும் கொள்ளளவை, ஒளி உணர்த்தடை, மாறும் தடை.
3. டயோட், Pnp திரான்ஸ்சிஸ்ரர், மின்கலம்.
4. மாறும் தடை, மாறும் கொள்ளளவை, இருவாயி.

12. அரியத்தினூடாக வெள்ளொளியை செலுத்தும்போது விலகல் கோணத்தை உருவாக்குவது எது?
1. பச்சை 2. ஊதா 3. சிவப்பு 4. நீலம்

13. தளவாடியில் தோன்றும் விம்ப இயல்புகள் அல்லாதது.
1. நிமிர்ந்தது 2. தலைகீழானது
3. மாயமானது 4. பொருள் அளவானது

14. இரு தளவாடிகள் $20^0$ சாய்வில் வைக்கப்பட்டு, அவற்றிற்கிடையே பொருள் வைக்கப்பட்டால் உருவாகும் விம்பங்களின் எண்ணிக்கை யாது.
1. 18 2. 17 3. 20 4. 21.

15. 
தரப்பட்ட படத்தில் அலை நீளத்தைக் குறிப்பது
1. AC 2. ABC
3. AE 4. ABCD

16. 
...ண்டில் நிகழ்ந்துள்ள மாற்றத் திற்கு எவ்விழையத்தை அகற்றியமை காரணமாகும்.
1. மாறிழையம் 2. மேற்பட்டை
3. காழ். 4. உரியம்

17. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்.
1. கொழும்பு 2. கண்டி 3. தலவாக்கலை 4. கம்பளை

18. பின்வரும் பொருள்களுள் பொஸ்பரசை வழங்கும் பசளை எது?
1. அமோனியம் சல்பேற்று 2. எலும்புத்தூள்
3. தொலமைற்று 4. சாம்பல்

19. ஒரு சுரத்தின் சுருதியை அதிகரிப்பதற்காக
1. அதிர்வுகளின் மீடிறனை குறைக்க வேண்டும்.
2. அதிர்வுகளின் மீடிறனை அதிகரித்தல்.
3. வீச்சத்தை குறைக்க வேண்டும்.
4. வீச்சத்தை அதிகரிக்க வேண்டும்.

20. வியர்வைச் சுரப்பியின் மிகமுக்கியமான தொழிற்பாடு யாது?
1. உடல் வெப்பநிலையைச் சீராக்கல்.
2. தோலைச் சுத்தமாக வைத்திருக்கும் எண்ணெயைச் சுரத்தல்.
3. உடலிலிருந்து யூரியாவை அகற்றல்.
4. அனுசேபத்தின் கழிவுப் பொருள்களை வெளியகற்றல்.

21. கண்ணினுள் செல்லும் ஒளியின் அளவை கட்டுப்படுத்துவது எது?
1. வன்கோதுப்படை 2. விழித்திரை
3. கதிராளி 4. பார்வை நரம்பு

22. உணவுச் சங்கிலியில் 1 ஆம் படி நுகரியாக எப்போதும் அமைவது எது?
1. தாவரம் 2. தாவரவுண்ணி 3. அனைத்துமுண்ணி 4. ஊனுண்ணி

23. மின் தலையை பாதிக்காத காரணி எது
1. குறுக்குவெட்டு முகப்பரப்பு 2. அடர்த்தி
3. நீளம் 4. தத்தடை

24. திருகாணி உயர்த்தி ஒன்று 28. cm நீளமுள்ள புயத்தில் 20N விசை பிரயோகிக்கப்பட்டது. அதன்போது 1584 N அமைவானது 1 cm உயர்த்தப்பட்டது. பொறியாளி வினைத்திறன் பொறி யாது?
1. 45. 2. 28 3. 100 4. 79.2

25) குவிவாடி மோட்டார் வாகனங்களின் பிற்பக்க ஆடியாக பயன்படுத்தவதற்கு காரணம்
1. விம்பங்கள் அடிக்கடிப் பின்னால் தோன்றும் என்பதால்
2. எப்பொழுதும் விம்பம் நிமிர்ந்து என்பதால்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்*
*பொருந்தலும் வல்லது அமைச்சு*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# ஏமாளிகள் மக்களானால் கோமாளிகள் அரசராவர்!

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஒரு கோமாளித்தனமான அரசு என்றும், பல கோமாளிகள் இந்த அரசில் அங்கம் வகிக்கிறார்கள் என்றும், சிறிலங்காவின் மிகவும் பொறுப்பு வாய்ந்த - நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் பாரம்பரியம்மிக்க பரம்பரையைச் சேர்ந்தவர் என, தன்னைத்தானே பெருமையுடன் கூறிக்கொள்ளும் சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

அவரின் இந்த வார்த்தைகள் 'ரணில்' அரசாங்கத்தை கொச்சைத்தனமாக கேலிசெய்யும் தொனியில் அமைந்திருந்தாலும்கூட, அவரை ஒரு பொறுப்பற்ற மூன்றாம்தரமான அரசியல்வாதியாக இனங்காட்டவே, அது பெரிதும் உதவியுள்ளது எனலாம். எப்பொழுதுமே தனது அரசியல் எதிரிகளை மிகவும் மட்டகரமாகப் பேசுவதிலும், அவமதிப்பதிலும் - இன்னுமதிகம் சொல்லப்போனால், அவர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதிலும், சந்திரிகா எப்போதுமே ஒரு நாகரிகமான - கண்ணியமான அரசியல்வாதியாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டதே கிடையாது.

இது அவருடைய பாரம்பரிய குணாம்சம் என்று கூடக் கூறமுடியும். என்றுமே அவர் நேர ஒழுங்கொன்றை கடைப்பிடித்தது கிடையாது. அவரின் இந்த இயல்பானது - பலதடைவைகளில் அவர் மீது பகிரங்கமான பலத்த கண்டனங்களை பலரும் தெரிவிக்க காரணமாயிற்று.

ஆனாலும், அவர் தன்னை மாற்றிக்கொண்டது கிடையாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதித் தனத்தின் தனித்துவத்தன்மையே அதுதான் என, அவர் நினைத்து செயற்படுகிறார் போன்றே அவரது செயற்பாடுகள் யாவும் எண்ணத்தோன்றும்.

இதனை அவர் தனது பலத்தின் வெளிப்பாடு எனக் கருதினாலும்கூட, உண்மையில் அது அதிமோசமான உளவியல் சிக்கலுடன் கூடிய பலவீனமாகவே பலராலும் கருதப்படுகிறது.

இது ஒரு தவறான கருத்தேயல்ல...

முன்னர் அவர் முழுமையான அதிகார பலத்துடன் நாடாளுமன்றத்தையும், தனது கட்சியின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்த காலப்பகுதியில் - அவர் ஒரு சர்வாதிகாரி போன்றே செயற்பட்டார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

தான் நினைத்ததை தனது அதிகாரபலத்தால் செய்துமுடிக்கும் வெறிகொண்ட ஒருவராகவே, அவர் தனது ஏழாண்டுகால ஆட்சியை சுயாதீனமாகக் கொண்டுசெலுத்தினார்.

அதுவே அவரது தோல்விக்கும் காரணமாயிற்று.

தமிழ்மக்களுக்கு எதிரான போரைக்கூட - அநுருத்த ரத்வத்தையின் ஆலோசனையுடன் அவர் மேற்கொண்ட விதம், அகங்காரத்தன்மையுடன் கூடிய ஒன்றேயாகும்.

போரில் ஏற்பட்ட பின்னடைவுகளும், தோல்விகளும், அரசியலில் ஏற்பட்ட மாற்றமும் அவரைத் தனது செயற்பாடுகளின் தவறுகளை அல்லது குறைபாடுகளை தானே மதிப்பீடு செய்யவைத்திருக்கவேண்டும். ஆனால், அவர் அப்படித் தன்னை சுயவிமர்சனத்திற்குள்ளாக்கிக்கொள்ளும் பெருந்தன்மை கொண்டவராக இல்லை.

சமாதான சூழல் உருவான வேளையிலும், புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்தான வேளையிலும்கூட, அவர் சூழலில் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தனது தேசத்தின் நலனுக்காகவேனும் மாறிவரும் சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ள முன்வரவில்லை.

மேலும் மேலும் மூர்க்கத்தனமும், பழிவாங்கும் சிந்தனையும் கொண்டவராகவே உருக்கொள்ளத் தொடங்கினார்.

அவரது இந்த சுபாவந்தான் தனது கணவரைக் கொன்ற கொலையாளிகள் என அவராலேயே குற்றஞ் சுமத்தப்பட்ட ஜே.வி.பியினருடன் - முரண்பாடுகளுக்கு மத்தியில் ஒரு உடன்படிக்கை காணத்தூண்டியது.

மீண்டும் அவர் தனது பலவீனமான நிலையை வெளிப்படுத்திக்கொண்டார். இவையாவும் - அவரையொரு குழப்பமான பெண்ணாகவும், மோசமான பழிவாங்கும் உணர்வு மேலோங்கிய மூன்றாந்தர அரசியல்வாதியாகவும் இனங்காட்டவைத்ததுடன், அவரை ஒரு கோமாளித்தனமான ஜனாதிபதியாகவும் உணரவைத்தது.

அவர் தனது ஆலோசகராக - அநுரா பண்டாரநாயக்கவையும், லக்ஷ்மன் கதிர்காமரையும் நியமித்தபோது அந்தக் கோமாளித்தனமும் மேலும் உறுதிசெய்யப்பட்டதாயிற்று. இந்த நிலையில் அவர் ரணில் அரசில் பல கோமாளிகள் இருப்பதாகவும், ஒரு நகைச்சுவைக்காகவே ஐ.தே.முன்னணி அரசாங்கத்தை தான் நியமித்துள்ளதாகவும், கூறியிருப்பதுதான் சுத்தப் பைத்தியக்காரத்தனமாக உள்ளது.

ஒரு பொறுப்புள்ள - தேசப்பற்றுள்ள ஜனாதிபதி வெறும் நகைச்சுவைக்காக கோமாளிகள் நிறைந்த ஒரு அரசாங்கத்தை தான் நியமித்திருப்பதாகக் கூறுவதானது - சிறிலங்காவின் ஆட்சிப்பீடத்தின் அவலநிலையைக் கோடிட்டுக்காட்டுவதாகவே உள்ளது.

## நாடும் நடப்பும்




### மாணவர்களை படையினர் குண்டுவீசிக் கொன்றபோது

# மௌனம் காத்திருந்த சர்வதேசம் இப்போது அக்கறை கொள்கிறதா?

### பல்கலைக்கழக விரிவுரையாளர் சூசை ஆனந்தன்

நாகர் கோவிலிலும், நவாலியிலும் எமது சிறார்கள் மீது- இலங்கை அரசு குண்டுவீசிக் கொன்றபோது, மௌனம் காத்த சர்வதேச சமூகம், இப்பொழுது மட்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் சிறார்களை தமது படையணிகளில் சேர்த்து வருவதாக குற்றஞ்சாட்டி, எமது சிறார்களில் அக்கறை கொள்வதாகக் காட்டிக்கொள்வது - எந்த வகையில் நியாயமானது என்று, யாழ்.பல்கலைக்கழக புவியற்துறை விரிவுரையாளர் ஏ.எஸ். சூசைஆனந்தன் கேள்வி எழுப்பினார்.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22 ஆம் திகதி விமானப்படையின் புக்காரா விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட- 20 பாடசாலைச் சிறார்களின் ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகயிலேயே, அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

வடமராட்சி கிழக்கு - நாகர் கோவில் மகாவித்தியாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட பாடசாலைச் சிறார்களது 8 ஆம் ஆண்டு நினைவு நாள், நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து, பருத்தித்துறையிலுள்ள - புலோலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இயங்கிவரும் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் - இந்த ஞாபகார்த்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்விற்கு - பாடசாலை அதிபர் ச.மகேந்திரன் தலைமை தாங்கினார். பொதுச்சுடரை, வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் மற்றும் வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் செ.தாயகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியை, வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா ஏற்றிவைக்க, கொல்லப்பட்ட 20 மாணவர்களது உருவப்படங்களுக்கும் - அவர்களது பெற்றோர் மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினர்.

அகவணக்க நிகழ்வையடுத்து - அதிபர், தலைமையுரையை ஆற்றினார். மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற இந்த நினைவுதின நிகழ்வில் - பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலரும் கதறியழுததால், நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அனைவரும் சோகமயமாக காணப்பட்டனர்.

அங்கு நினைவுரையாற்றிய விரிவுரையாளர் ஏ.எஸ். சூசை ஆனந்தன் மேலும் உரையாற்றுகையில் -

"இடம்பெயர்ந்துள்ள நாகர்கோவில் மகாவித்தியாலயம், மீண்டும் சொந்த இடத்திற்குச் செல்லவேண்டும். அதியுயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படவேண்டும். இறந்துபோன சிறார்களது ஞாபகார்த்த தூபியொன்று, அங்கு நிறுவப்படவேண்டும். இனிமேலும் இவ்வாறாக எமது பிள்ளைகள் கொல்லப்படுவது அனுமதிக்கப்படக்கூடாது. இவற்றிற்கேதுவாக, தமிழீழ விடுதலைப் புலிகளது கைகளில் ஆட்சி கிட்டவேண்டும். அதற்கேதுவாக, இடைக்கால நிர்வாகம் அவர்களிடம் கையளிக்கப்படவேண்டும்" என்றார்.

மேலும், நினைவுரைகளை - மருதங்கேணி கோட்டக் கல்விப்பணிப்பாளர், யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன், உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் சா.அரியகுமார், வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

விசேட சிறப்பு நினைவுரையை - விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் நிகழ்த்தினார்.

1990 ஆம் ஆண்டில் - பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை மற்றும் சேந்தாங்குளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களும் - அதேபோன்று வடமராட்சி கிழக்கின் - மருதங்கேணி, வத்திராயன், ஆழியவளை மற்றும் உடுத்துறை பகுதிகளிலிருந்து 1991 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த மாணவர்களும், இந்தப் பாடசாலையில் கல்வி கற்றவேளை, இந்த அசம்பாவிதத்தில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(202)

# நுண்கலைப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்பாணம்)

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழகப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

சித்திரமும்வடிவமைப்பும், நடனம், இசை ஆகிய பாடநெறிகளின் ஒவ்வொரு ஆண்டுக்குமான அரையாண்டுப் பரீட்சையின் முடிவுகளே தற்போது வெளியாகியுள்ளன. யாழ். பல்கலைக்கழக கலைப்பீட விளம்பரப் பலகையில் பரீட்சை முடிவுகளைப் பார்க்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலை விளையாட்டுச் சங்க ஏற்பாட்டில் இன்று வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள்!


பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை


தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

(யாழ்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 17 வயது பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள், இன்று நடைபெறவுள்ளன. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடத்திற்காக - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் மோதவுள்ளன.

மூன்றாம் இடத்திற்காக - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும், உடுவில் மகளிர் கல்லூரியும் மோதவுள்ளன.

லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையோடு, தமிழீழ விளையாட்டுத் துறையினரும் இணைந்தே இந்தப் போட்டிகளை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ள போட்டிகளின்போது, இளைப்பாறிய அதிபர் அ.பஞ்சலிங்கம் பிரதமவிருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினராக - தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கி.பாப்பாவும், கௌரவவிருந்தினராக யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.ஏ.எம் குணசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

போட்டிகளில் - வெற்றிபெறும் அணிகளுக்கு வெற்றிக் கேடயங்களும், முதலாம் இடத்தை பெறும் அணிக்கு ரூபா 10,000 பணப்பரிசும், இரண்டாம் இடம்பெறும் அணிக்கு ரூபா 7,,00 பணப்பரிசும், மூன்றாம் இடம்பெறும் அணிக்கு 5,000 பணப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

# உள்ளக சுயநிர்ணயம் கொண்ட மக்களுக்கு ஒரு அரசாங்கத்துக்குரிய அந்தஸ்து உண்டு!

**சமஷ்டியும் சுயநிர்ணயத்திற்கான உரிமை என்னும் விடயம் தொடர்பாக அரசமைப்பு மற்றும் நிர்வாகச் சட்டத்துறை பேராசிரியரும், சுவிற்ஸர்லாந்து பறிபேர்க் பல்கலைக்கழக சமஷ்டிக்கான நிறுவனத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் கலாநிதி தோமஸ் பிளெய்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையின் தொகுப்பு**

ஒஸ்லோ மாநாட்டில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக, ஐந்து முக்கிய கருத்துக்கள் பற்றிப் பேராசிரியர் பிளெய்னர், யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் உரையாற்றினார்.

### சுயநிர்ணய உரிமை - அக சுயநிர்ணய உரிமை

சுயநிர்ணயம் என்பது ஒரு அடிப்படை விடயம். அதைப்பற்றி தேசங்களின் உள்ளேயும், சர்வதேசங்களிடையேயும் பேசப்பட்டு வருகிறது.

இதில் ஒரு முக்கியமான விடயம் கனடா உயர்நீதிமன்றம் எடுத்துள்ள தீர்மானங்களாகும். இதில் ஒரு முக்கிய தீர்மானம் சர்வதேச மட்டத்தில் வெளிவாரி சுயநிர்ணய உரிமை பற்றி உள்ளடக்கிய நிர்ணயத்தைவிட சுயநிர்ணயம் பற்றி சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சட்டம் இல்லை என்பது ஒன்று. மற்றையது சுயநிர்ணயம் என்று சொல்லும்போது, சட்டத்தின் ஆட்சிக்கு மரியாதை. மற்றையது ஜனநாய உரிமை என்பது முக்கிய விடயங்களாக அமைகின்றன.

ஒஸ்லோவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அங்கு பேசப்பட்டபடி உள்ளக சுயநிர்ணயம் பற்றி அங்கு கேள்வியில்லை. இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது மறுப்பதற்கில்லை. அதாவது, ஒரு குழுமம் - தனது கலாசார விவகாரங்கள், போக்குவரத்து விவகாரங்கள் பற்றி தீர்மானம் எடுப்பதான உரிமை.

என்னுடைய நோக்கில் உள்ளக சுயநிர்ணயம் என்று சொல்லப்படுகிறபோது, கூட்டு ஆட்சி என்று சொல்வோம். அது ஒரு முக்கியமானபங்கைப் பெறுகிறது. அரசியல் யாப்பை உருவாக்கும் செயற்பாட்டிலும், அந்த குழுமத்துக்கு உரிமை உண்டு. அரசியல் யாப்பின் உள்ளே சில சட்ட விவகாரங்களை எடுப்பதற்குக்கூட, அந்த குழுமத்திற்கு உரிமை உண்டு. ஆகையால், ஒஸ்லோவைப் பொறுத்த வரையில், உள்ளக சுயநிர்ணயத்தை அது ஏற்றுள்ளது. கேள்வி என்னவெனில், அங்கு சுயநிர்ணயத்தை எந்தளவில் எவ்வகையில் நடைமுறைப்படுத்துவது என்பதே அதுவாகும். இன்னொரு முக்கியமான கேள்வி இதன் உரிமையாளர் யார்? என்பது ஒரு முக்கியமான கேள்வியாக இருக்கும். ஏனெனில், இங்கு கூட்டுரிமை வருகிறது.

கூட்டுரிமை என்கிறபோது, மண், இனம் என்பன வருகின்றன. சிலவேளை, சில மக்கள் இந்தக் குடும்பத்திற்குள்ளே இருந்தாலும், நிலப்பரப்புக்குள் இல்லாமல் வெளியே இருப்பார்கள். இப்படியான பல விவகாரங்கள் சித்திரிக்கப்பட வேண்டியவை.

உள்ளக சுயநிர்ணயம் என்று கூறப்படுகின்றபோது, இந்த உரிமையை யார் கொண்டிருக்கிள்றார்கள் என்று நோக்குகின்றபோது, இந்தக் குழுமத்திற்கு ஒரு அரசு அந்தஸ்து உண்டு எனலாம். யாப்பை உருவாக்கும் பணியில் பங்குபெற்ற உரிமையுண்டு. யாப்பை உருவாக்கும்போது, அவர்களுடைய சம்மதத்துடன்தான் அந்த யாப்பை உருவாக்கலாமே ஒழிய அவர்களுக்கு எதிராக அல்ல.

கூட்டாட்சி இருக்கும்போது, ஒவ்வொரு அரசிற்கும் ஒவ்வொரு அரசியல் யாப்பு இருக்கும். அது கவர்ச்சியான ஒரு யாப்பாக இருக்க வேண்டும். அதேபோன்று, மேல்மட்டத்தில் ஒவ்வொரு அலகு வைத்திருப்பதுபோன்று, எல்லோருக்கும் பொதுவாகவும் ஒருயாப்பு அமைந்திருக்கும்

### பாரம்பரிய தமிழ்ப்பிரதேசங்களோடு சார்ந்த சுயநிர்ணய உரிமை

பாரம்பரிய மண், மரபுவழிப் பாரம்பரிய நிலம் என்பது ஒரு புரட்சிகரமானதாக இருந்தது. ஏனென்று சொன்னால், ஜனநாயகம் என்று வளர்ச்சியாகக் கூறும்போது, அது எதனை அடிப்படையாகக்கொண்டதாக அமைகின்றது. பெரும்பான்மையினரின் கொடூரம் என்றளவுக்கு, அதனை பெரும்பான்மையினர் பாவித்துக் கொள்ளலாம். ஆனால், இங்கு மரபுவழித் தாயகம் என்று பேசும்போது, முக்கியம்பெறுவது மண் ஆகும். மண்சார் கோட்பாடு என்று ஒரு கோட்பாடு உள்ளது. லெப்னான், பெல்ஜியம் போன்ற நாடுகளில் சின்னச் சின்னப் பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி மண்சார் கோட்பாடு என்பதில் மொழியுரிமை பாதிக்கப்படும் என்பது கூறப்படுகின்றது.

ஒரு பிரதேசத்தில் மொழியுரிமை ஜேர்மன் ஒரு பிரதேசத்தில் மொழியுரிமையை எடுத்துக் கொண்டால், ஒரு மாதிரியாகவும் முழு அளவிலும், மொழி உரிமை வித்தியாசமாக இருக்கும். மொழியுரிமை வரையறுக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

### தமிழ்பேசும் மக்களுக்கு என்ற சொற்பதம்

தமிழ்பேசும் மக்கள் என்ற சொற்பதத்தில் இங்கு மொழி முக்கியம் பெறுகின்றது. இனம், மதம் என்பன முக்கியம்பெறவில்லை. இவ்வாறெனின், தனித்துவமான யாப்பு முறையொன்றை உருவாக்க வேண்டியிருக்கும். உலகத்திலேயே தனித்துவமான ஒரு யாப்பு எமக்குத் தேவை யாக இருக்கும். யாப்பு ஒன்று உருவாக்கம் பெறும்போது, ஏதோவொரு அடிப்படையில் யாப்பை அமைத்து ஒரு சிலர் ஒதுக்கப்படுகின்றார்கள். ஒரு குறிப்பிட்ட இனத்தில் அடிப்படையில் யாப்பு அமைக்கப்பட்டிருத்தலும், அந்த யாப்பு அமைந்த நாடுகளில் வேறின மக்கள் விளிம்புக்குத் தள்ளப்படுகின்ற நிலையையும் காணலாம்.

அடுத்து பாவப்படுகின்ற மக்கள் என்பது- பல்லின மக்கள் என்பது அதுவாகும். அவ்வாறெனின், பல்லின மக்களையும் ஒன்றுபடுத்தக் கூடிய வழியென்ன? எவ்வாறு அந்த ஒரு யாப்பை உருவாக்குவது. இந்த வகையில் சகல மக்களையும் ஒன்றாக்கிவிடும் ஒரு அரசியல் யாப்புக் காணப்பட வேண்டும். இதுவொரு கடினமான முயற்சியாகவிருக்கும். அங்கு சில விழுமியங்கள் கடைப்பிடிக்க வேண்டும். பல்லினத் தன்மை அல்லது பன்மை பேணப்பட வேண்டும். இதன்மூலமே ஒரு தனித்துவமான யாப்பை உருவாக்க வழி ஏற்படும். இதற்கு ஒரு உதாரணத்தைக் குறிப்பிட வேண்டுமாயின், சங்கீதம், தனியாக ஓர் இசையில் பாடும் சங்கீதம் அல்லது பல குரல்கள் ஒரே நேரத்தில் பாடுகின்ற இராகங்கள் போன்று அரசியலும் வளர்ந்து வருகின்றது.

பல இராக இசைபோல, பல்லினத்துக்கு ஒரு அரசமைப்பு என்கின்ற முறைக்கு நாம் இப்போது வளர்ந்துள்ளோம். யார் இந்த இசையை நடாத்தும் நெறியாளன் என்பது தான் கேள்விக்குரியதொன்றாக அமைகின்றது.

### ஒரு நாட்டின் உள்ளே ஐக்கிய அரசு

அடுத்த சொற்பதம் கூட்டாட்சி அமைப்பு என்பதாகும். ஏதோவொரு வகையிலான கூட்டாட்சி அமைப்பு ஒன்று இருக்கவேண்டும். நிலத்தை அதாவது பாரம்பரிய மண்ணை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அது மதிக்கப்படவேண்டும். இரண்டாவது சுயாட்சி அல்லது கூட்டாட்சி. இவை இரண்டுக்கும் இடையேயான ஒரு சமநிலை. இது யாப்பு மூலமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைக்கப்படவேண்டும். யாப்புக்குள்ளேயே அதற்கு இடங்கொடுக்கப்பட வேண்டும். மீண்டும் அரசியல் யாப்பு ஆண்டு அலகுகளின் சம்மதத்தோடுதான் யாப்பு அமைக்கப்பட வேண்டும். அவற்றிக்கு எதிராக அல்ல.

அமெரிக்காவின் சமஷ்டியானது, கொஞ்சம் வேறுபட்டது. அரசின் தலையீட்டைக் குறைப்பதற்கு, மட்டுப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட யாப்பு, பல இனங்கள் பன்மைத்துவம் என்பதை மதித்து, அதைப்பேணும் ஒரு கூட்டாட்சி அமைப்பாக உருவாக்கப்பட வேண்டும். இதுவே நாம் பேசும் ஒரு கூட்டாட்சி அமைப்பின் ஒரு தனித்தன்மையாக இது அமைகின்றது.

### சகல மக்களுக்கும் ஏற்புடையதான தீர்வு

சகல குடும்பங்களுக்கும் ஒரு ஏற்புடையதான அமைப்பு இந்தக் கூட்டாட்சியுள்ள ஒவ்வொரு அலகுக்கும் ஒருயாப்பு, எல்லாம் சேர்ந்து ஒரு பொதுயாப்பு ஒன்றிருக்கும். இதில் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படும் விடயம் ஒரு சவாலாக இருக்கும் விடயம் என்னவென்றால், எல்லாக் குடும்பங்களுக்கும் ஒரு தாய் நாடாக இதை அமைப்பது. உதாரணமாக - இந்தத் தீவுக்கு வெளியே இருப்பவர்களும் இந்தத் தீவைக் காட்டி, இது என்னுடைய தாய்நாடு என்று கூறக்கூடிய வகையில் இந்த அமைப்பு உருவாகவேண்டும். இதுவொரு சவாலாக இருக்கும்.

## மருதங்கேணியில் தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகள்

தியாகி திலீபனின் 16 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் மருதங்கேணிப் பிரதேசத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், அரச நிறுவனங்கள் என்பவற்றில் - விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு, சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு நிகழ்வுகள் தினமும் நடைபெற்றுவருகின்றன.

நாளை இந்தப் பிரதேச பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளும் உண்ணாவிரத நிகழ்வு உடுத்துறை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

திலீபனின் இறுதிநாள் நிகழ்வுகள் ஆழியவளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. (122)

## குணசேகரன் அறநெறி நூல் வெளியீட்டு விழா

கோப்பாய் நாவலர் மகா வித்தியாலய அதிபர் கே.வி.குணசேகரம் எழுதிய அறநெறி சிந்தனைகளை மாணவர்களுக்குப் போதிக்கும் ஆத்திசூடிக் கதைகளின் நான்கு தொகுதிகள் அடங்கிய நூல் வெளியீட்டுவிழா - எதிர்வரும் 28 ஆம் திகதி, மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறவுள்ளது.

உலக .சைவப்பேரவைச் செயலாளர் கா.தயாபரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் - முதன்மை விருந்தினரான பேரூர் ஆதினத்தைச் சேர்ந்த சாந்தலிங்கம் சுவாமிகள் கலந்துகொள்ளவுள்ளார்.

வெளியீட்டு உரையை - இந்து கலாசார அமைச்சைச் சேர்ந்த இ.பேரின்பநாயகமும், அறிமுகவுரையை அஷ்டலக்சுமி பதிப்பக நிறுவுனர் ஆ.கந்தையாவும் நிகழ்த்துவார்கள். சிறப்புரையை உலக சைவப்பேரவையின் இலங்கைக் கிளைச் செயலாளர் மு.கதிர்காமநாதனும் உலக சைவமாநாட்டு கோலாலம்பூர் அமைப்பாளர் என்.திருவாசகமும் ஆற்றவுள்ளனர்.

இந்த நிகழ்விற்கு - லண்டன், மலேசியா, தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், இந்தியா, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் பல சைவப் பேரறிஞர்கள் வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (101)

## வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தல்

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நெறியாளர்குழுவைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை - சங்கத் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற தபால் அதிபர் வி.எஸ். தியாகராஜா தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த பல வருடங்களாக, உதவி அரசாங்க அதிபரைத் தலைவராகக் கொண்ட நியமனக் குழுவினரே - மேற்படி சங்கத்தினை நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (122)

# தனித்தரப்பாக பேசமுன்னர் ஒரேதரப்பாக மாறவேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம்

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றியே ஆக வேண்டும். ஆனால், அதற்கு முன்னர் பல்வேறு கூறுகளாகப் பிரிந்து நிற்கும் நாம் முஸ்லிம் காங்கிரஸின் கீழ் ஒரு தரப்பாக மாறியாக வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப்பின் மூன்றாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதுவில் நடந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில் -

"சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு நிச்சயம் தரப்பட வேண்டிய விடயமாகும்.

இது ஏற்கனவே- அரசினாலும், விடுலைப் புலிகளாலும் உத்தரவாதம் தரப்பட்ட விடயமாவதுடன் 'சர்வதேச சமூகத்தினாலும், ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

ஆனாலும், இன்று தனித்தரப்பைப் பற்றிப் பேசும் நாமெல்லோரும், ஒரே தரப்பாக மாற வேண்டுமென்ற யதார்த்தத்தையும் உணர்ந்து செயல்படவேண்டும்.

இதற்காகவே, எமது கதவுகள் திறந்தேயுள்ளன என்பதை மீண்டும் கூறவிரும்புகிறேன்.

மறைந்த தலைவர் அஷ்ரப் சாதனைகளோடு மட்டுமல்ல, வேதனைகளோடும் பல பாடங்களை எமக்கு விட்டுச் சென்றுள்ளார்.

இந்த வகையில் அவர் வகுத்துச் சென்ற பாதையில் எமது மக்களின் விடிவுக்காக முஸ்லிம் காங்கிரஸ் கடசியை வழிநடத்திச் செல்கிறோம்.

அன்று தலைவரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் ஒன்றாகப் பார்க்கப்பட்டது.

ஆனால், அதற்கு முரணாக இன்று தலைமையை நிறுவனமாகப் பார்க்காமல் தனிமனி தனது அடையாளமாகப் பார்க்கச் சிலர் முனைந்துள்ளனர்.

இன்று, இந்த வகையில் தாமும் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் தான் எனக்கூறிக்கொண்டு அஷ்ரப் காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கிச் சிலர் பித்தலாட்டம் காட்டியும் வருகின்றனர்.

ஆனால், வட-கிழக்கிலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸின் பூர்வீகத்தைக் கொண்டவர்கள் என்ற உண்மையை ஒருபோதும் மறந்துவிடமுடியாது.

இவர்களுக்கெல்லாம் அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள மயோன் முஸ்தபாவுக்கு கூட முஸ்லிம் காங்கிரஸின் கதவுகள் இன்னும் மூடப்படாமல் திறந்தேயுள்ளன.

இன்று, மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் மரணம் மர்மம் துலக்கப்படாமல் இருக்கும் பொழுது, அவருக்கு ரூ 4.50 முத்திரை தேவையா எனக்கேட்டு, சிவப்பு எழுத்துக்கள் கொண்ட சுவரொட்டிகள் நாடெங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

இத்தகைய அசிங்கம் நமது கட்சியை பிளவுபடுத்தவே மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால்,இருதுருவங்களாகவுள்ள ஜனாதிபதியையும், பிரதமரையும் இந்த முத்திரை வெளியிட்டு விழாவில் ஒருங்கே வந்து அமரச்



செய்துள்ள உயரிய முக்கியத்துவம் தங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் மேடைகளில் தான் தேசியத் தலைமைகளை! ஒன்றாக கூட்டமுடியுமென்ற உண்மை நிருபணமாகியுள்ளது.

இன்று இருக்கும் சூழலில் நாம் மிக நிதானமாக இருக்கவேண்டிய நிலை உள்ளது. இன்று முஸ்லிம் காங்கிரஸின் தயவின்றி ஆட்சி சாத்தியமாகாது என்பதில் பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் உடன்பட்டிருக்கின்றன.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களுக்கு தனியலகு தேவையில்லையெனக் கூறி, வந்த தென்பகுதி முஸ்லிம் தலைமைகள் இன்று தனியலகு வேட்கை நிலைக்கு வந்துள்ளனர்.

எங்களுடைய அணுகுமுறையே இதற்குக் காரணமாகும். இவ்வாறு அவர் கூறினார். (07)

# ஈராக் மீதான ஆக்கிரமிப்பு சரியானதே அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு!



ஈராக்கின் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு சரியானதென அமெரிக்க அதிபர் புஷ் நேற்று ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுவதற்கு முன்னர் - வெள்ளிக்கிழமை "பொக்ஸ்" தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அதிக பங்களிப்பு ஈராக்கிற்கு தேவையில்லை எனவும், ஆனால் உலக நாடுகள் ஓர் அரசியலமைப்பை அங்கு உருவாக்குவதற்கு உதவிபுரியலாம் எனவும், ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தல்களை கண்காணிக்கலாம் எனவும் அதிபர் புஷ் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈராக்கியரிடம் ஆட்சிப்பொறுப்புக்களைக் கொடுக்கவேண்டும் என அண்மையில் பிரான்ஸ் விடுத்த வேண்டுகோளை, அமெரிக்க அதிபர் நிராகரித்தார்.

இதே நேரத்தில் அண்மைக்காலத்தில் அமெரிக்கப் படையினர் ஈராக்கில் உயிரிழப்புக்களை நாளாந்தம் சந்திக்க வேண்டியுள்ளது. திங்களன்று ஈராக்கில் உள்ள ஐக்கியநாடுகள் சபையின் காரியாலத்திற்கு அருகில், நடந்த குண்டுவெடிப்பில் இருவர் உயிரிழந்தனர். ஐக்கிய நாடுகள் காரியாலயம் தொடர்ந்து இயங்குவதற்கு, போதிய பாதுகாப்பு தேவைப்படுவதாக கோபி அனான் தெரிவித்துள்ளார்.

# அணு உலை தொடர்பான காலக்கெடுவை ஈரான் அரசு ஏற்றுக்கொள்வதற்கு மறுப்பு!



அணுசக்தி உலைகளை ஆக்கபூர்வமான தேவைகளுக்கு ஈரான் பாவிக்கிறது என்பதை உறுதிப்படுத்துமாறும், அதற்கான இறுதித்தினம் ஒக்ரோபர் 31 ஆம் திகதியெனவும், ஐக்கிய நாடுகளின் சர்வதேச அணுசக்தி அமைப்பு தெரிவித்த கருத்துக்கு- ஈரான் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அத்துடன் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் மறுப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச அணுசக்தி அமைப்பின் ஈரானிய பிரதிநிதி அலி அக்பர் சலிகி அவ்விடங்களை பார்வையிடுவதற்கான முழு ஒத்துழைப்பை வழங்கியிருப்பதாகவும், மேற்கொண்டு எந்த ஒத்துழைப்பும் வழங்கப்போவதில்லை எனவும் கடந்த திங்கட்கிழமை தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார். சர்வதேச அணுசக்தி அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள், ஈரான் தனது முழு ஒத்துழைப்பை வழங்கியபோதும் அந்த நாட்டிற்கு காலக்கெடுவொன்றை விதித்ததை பலமாக கண்டித்திருக்கின்றன.

இதேவேளை, பாரியளவில் அழிவைத்தரும் ஆயுத உற்பத்திகளை தாம் எதிர்ப்பதாகவும், ஆனால் தமது எரிசக்தி தேவைகளுக்கு அணு உலைகளைப் பாவிப்பதில் எதுவித தவறுமில்லை என ஈரானிய ஜனாதிபதி முகமட்கதாமி தெரிவித்துள்ளார்.

# காஸா பகுதியில் ஊடுருவ முயன்ற பலஸ்தீன போராளி சுட்டுக்கொலை

நேற்று 'காசா' பகுதியில், ஊடுருவ முற்பட்ட இஸ்லாமிய தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த ஒருவர் இஸ்ரேலிய படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்கில் பாதுகாப்பு காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 215 பலஸ்தீனியர்களை விடுவிப்பதற்கு, இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக பலஸ்தீனப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களை லெபனான் தீவிரவாத அமைப்பான ஹிஸ்புல்லாவிடம் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் ஹிஸ்புல்லா அமைப்பினால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 4 இஸ்ரேலியர்களை விடுவிக்க முடியும் எனவும், இஸ்ரேல் கருதுவதாக 'அல்குட்ஸ்' என்னும் செய்திப் பத்திரிகை தெரிவித்துள்ளது.



இதனிடையே, நேற்றுமுன்தினம் சர்வதேச பிரதிநிதியிடம் அரபாத் கருத்துத் தெரிவிக்கும்போது - முழுமையான போர் நிறுத்தத்திற்கு உடன்படுவதற்குமுன், சமாதானப் படையொன்று கண்காணிப்பிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று கேட்டிருந்தார்.

அரபாத் வெளியேற்றப்படவேண்டும் என்ற இஸ்ரேலின் கோரிக்கையில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கான தந்திரம் இதுவென்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

## உலக நோக்கு



அமெரிக்க போர்வீரர் ஒருவர் 'பாலுயா' நகரில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம்.

# ஈராக்கின் தற்காலிக அரசினால் பொருளாதார மாற்றங்கள் அமுல்

ஈராக்கில் தற்போது ஆட்சிபுரியும்அமெரிக்க சார்புடைய அரசு பல பொருளாதார மாற்றங்களை விரைவில் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. எண்ணைச் சுத்திகரிப்பு ஆலைகள் தவிர்ந்த, ஏனைய தொழிற்சாலைகளை விற்பனைசெய்யவுள்ளது.

துபாயில் சர்வதேச நிதியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டில் ஈராக்கிய நிதி அமைச்சர் இக்கருத்தை தெரிவித்தார்.

அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட நிதியமைச்சரின் கருத்தின் மூலம் பல்தேசிய அமெரிக்க கொம்பனிகளுக்கு விற்பதற்கான ஒரு திட்டமென ஈராக்கியர்கள் கருதுவதாக பி.பி.சி. செய்தியாளர் ரிக்ஸ்பிரிங்கேற் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு ஐ.நா அடிப்படைக்கோட்பாட்டுக்கெதிரானது

## கோபி அனான் தெரிவிப்பு

ஈராக்கின் மீது அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு - ஐக்கியநாடுகளின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிரானதெனவும், உலகில் எல்லோரும் சுதந்திரமாக வாழ்வதற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் ஐ.நா. செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

நேற்று அமெரிக்க அதிபர் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுவதற்கு முன்னர், கோபி அனான் தனது உரையில் மேலும் தெரிவிக்கும்போது - 1945 ஆம் ஆண்டு ஐ.நாசபை உருவாக்கப்பட்டபோது அதற்கு ஏற்பட்டது போன்ற ஒரு நிலையே இன்று ஈராக் பிரச்சினையால் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.



ஐக்கியநாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 191 நாடுகள் இப்போரால் ஏற்பட்ட நெருக்கடிகளில் இருந்து தம்மை மாற்றிக்கொள்வதற்கு முயன்று கொண்டிருப்பதாகவும் - கோபி அனான் மேலும் தெரிவித்தார்.




காலம் கடந்த பின்னராவது கடந்த இரண்டு வருடங்களில் இரண்டு மூதறிஞர்களுக்கு சாகித்தியரெத்தினம் என்ற விருது, வழங்கிக்கௌரவிக்கும் சாகித்திய மண்டலத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.

கடந்தவருடம் மூதறிஞர் வரதர் என்ற தி. ச. வரதராசனுக்கு சாகித்தியரெத்தினம் என்ற விருது வழங்கப்பட்டது. இந்த வருடம் மூதறிஞர் சொக்கன் என்ற க. சொக்கலிங்கத்திற்கு சாகித்தியரெத்தினம் வழங்கிக் கௌரவித்திருக்கிறார்கள்.

இருவரும் இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் எல்லோராலும் போற்றி பாராட்டைப் பெறுகின்றவர்கள். இருவருமே தாடியில்லாத விசுவாமித்திரர், வசிட்டர் என்று அன்பாக அழைக்கப்படுபவர்கள். இருவரும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக தமிழ் சமூகத்திற்கு இலக்கியத்தில் அரும்பணி ஆற்றி வருபவர்கள்.

வரதர் தமிழில் மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையை வெளியிட்டு தமிழ் நாட்டில் மணிக்கொடிப் பரம்பரை உருவாக்கப்பட்டதுபோல், இங்கு மறுமலர்ச்சி பரம்பரையை உருவாக்கியவர். பத்திரிகைகளையும் வெளியிட்டவர். "வரதர் பல குறிப்பு" என்ற பலன் உள்ள தொகுப்பு ஒன்றையும், சில ஆண்டுகள் வெளியிட்டு வந்தவர்.

சொக்கன் எழுத்துடன் மட்டும் நிற்காது, சொற்பொழிவாற்றுவதிலும் இலக்கியத்திற்கும், சமயத்திற்கும் அருந்தொண்டாற்றிவருபவர். இந்த இருவருக்கும் சாகித்தியரெத்தினம் விருது வழங்கியதுடன் திருப்தியடையாது, இச்சேவையை சாகித்திய மண்டலம் தொடர்ந்து செய்யவேண்டும். இரு பெரியோருக்கும் ஊர் சுற்றியும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஆண்டு தோறும் சிறந்த படைப்புக்களை தெரிவு செய்தும், சாகித்திய மண்டலம் படைப்பாளிகளை கௌரவித்தும் வருகிறது.

இந்த வருடம் சிறந்த நூல்களைத் தெரிவு செய்வதற்காக, தமிழ் படைப்பாளிகளிடமிருந்து, 94 நூல்கள் சாகித்திய மண்டலத்திற்கும், போய்ச் சேர்ந்தனவாம். ஆனால், இவற்றில் ஏழு நூல்களே பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தன. சிங்களத்தில் 16 நூல்கள் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. 94 நூல்களில் தரமானவையாக 16 நூல்களை தெரிவுசெய்யமுடியவில்லையா, தமிழ் வளர்ச்சியடையவில்லை என்று இதைவைத்துச் சொல்லலாமா என்று இலக்கிய அன்பர் ஒருவர் கேட்கிறார்.

விருதுக்காக சாகித்திய மண்டலத்திற்கு ஒவ்வொரு நூலிலும் 5 பிரதிகள் அனுப்பிவகைக்கப்படவேண்டும். இந்த பிரதிகளுக்கு முன்னர் அவற்றிற்குரிய பணம் அனுப்பிவைக்கப்பட்டதாம். இப்பொழுது இது நிறுத்தப்பட்டு விட்டதாம். நூல் வெளியிடுவதில் உள்ள கஷ்டம் நூல்வெளியிட்டவர்களுக்குத்தான் தெரியும். அந்த நூலை வெளியே கொண்டுவருவதற்கு பணம் செலவிடுவது மட்டுமல்ல, நூல் அச்சாகும் அச்சகத்திற்கு எத்தனை தடவைகள் செல்லவேண்டும், நூல் அச்சாகி வெளியே எடுத்ததும் விற்பனைக்கு கொடுக்கவேண்டும். வியாபாரிகள் ஈழத்து நூல்களை விரும்பி வேண்டி, விற்பனையில் ஊக்கம் காட்டுகிறார்களா? தமிழ் நாட்டிலிருந்து வரும் புத்தகங்களைத்தானே கடையின் முன்பக்கம் வைத்திருக்கின்றார்கள். நூல் வெளியீட்டு நிகழ்ச்சி வைப்பதென்றால் பணச்சடங்கு போல வீடுகளுக்கு கொண்டு சென்று அழைக்கவேண்டும். பரிசுக்கு வரும் நூல்களுக்கு சாகித்திய மண்டலத்தினர் விலைகொடுத்தாலென்ன குடிமுழுகிப்போகும்.

தலைவர் பிரபாகரனைப்பற்றி பயங்கரவாதியென்று தினமும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் இன்னமும் எழுத்திக்கொண்டுதான் இருக்கின்றன. புலிக்கொடிகளைக்கண்டாலே இராணுவத்தினர் இன்னமும் மிரளுகின்றார்கள். பிரபாகரன் படங்களைக் கண்டாலும் முகங்கறுக்கும் படையினரும் இன்னமும் இருக்கிறார்கள். இந்தியாவிலும் பிரபாகரன் என்றதும் அச்சமடைபவர்களும், வெறுப்பை காட்டுபவரையும் காணலாம். தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு அந்தப்பெயரைக்கேட்டாலே ஏதோ மாதிரி, போதாக்குறைக்கு சுப்பிரமணியம் சுவாமி.

ஆனால் நாராயணசாமி என்ற ஊடகவியலாளர் ஒருவர் பிரபாகரன் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய ஒரு நூல் கொழும்பில் உள்ள விஜித்தா ஜாப்பா என்ற புத்தக வெளியீட்டு நிறுவனத்தினால், வெளியிடப்பட்டிருக்கின்றது. கொழும்பில் நான்கு நாட்கள் நடந்த புத்தக சந்தையில் இந்த நூல்கள் அனைத்தும் விற்று தீர்ந்துவிட்டன! பிழைக்கத் தெரிந்தவர்கள் யார்?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பாத நிலையில் யாழில் தேசிய விளையாட்டுவிழா அவசியம் தானா?

## கேள்வியெழுப்புகிறார் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழா நடைபெறாததை பலர் குறையாகக் கூறுகிறார்கள். மக்களின் இயல்புவாழ்வு திரும்பாத பட்சத்தில் அரசியல் நோக்கத்திற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த விளையாட்டு விழா அவசியம்தானா?"

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா. யாழ்.பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட விளையாட்டு வீரர்களுடனான கலந்துரையாடலின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் பாப்பா தொடர்ந்து உரையாற்றுகையில்,


விளையாட்டு ஒன்றியங்கள் தமக்கிடையேயுள்ள முரண்பாடுகளைக் களையவேண்டும். அப்பொழுதுதான் எமது வீரர்கள் சர்வதேச ரீதியில் சாதனை படைக்க முடியும்.

தற்பொழுதுதான் நாம் விளையாட்டுத் துறையில் ஓரடி எடுத்து வைத்துள்ளோம். எமது முன்னோர்கள் விளையாட்டுத்துறையில் கண்ட வளர்ச்சியைக்கூட நாம் இன்னும் எட்டிப்பிடிக்கவில்லை. இந்த நிலையில் எமது விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள் மத்தியில் நானா, நீயா என நிலவும் போட்டிகள் விரும்பத்தக்கவையல்ல. எமது கழகங்கள், விளையாட்டு ஒன்றியங்கள் தமக்கிடையே ஒற்றுமையை பலப்படுத்தும்போதுதான் நாம் எமது விளையாட்டுத்துறை அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கமுடியும். இனிவரும் காலங்களில் விளையாட்டுத் துறை தொடர்பாக இறுக்கமான கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படும். வீரர்களுடைய ஒழுக்கநெறி சம்பந்தமாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்கு அனைவரும் தமது ஒத்துழைப்பை நல்கவேண்டும்.

நாம் தென்னிலங்கை வீரர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களது திறமையை மதிக்கிறோம்.

மிகவிரைவில் எமது தலைவரின் தலைமையில் விளையாட்டுத்துறை வளர்ச்சிபெறும். எனவே வளர்ச்சியடையும் நிலையிலுள்ள நாம், எம்மிடையே உள்ள பகைமைகளைக் களைந்து செயற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# நாற்சந்தி



'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' இது ஒரு பழமொழிதான். ஆனால் அர்த்தமுள்ள பழமொழி. கதிர்காமர் இப்போது இந்த ஆண்டியின் நிலையில்தான் உள்ளார்.

திருகோணமலை துறைமுகம் மற்றும் கடற்படைத்தளம்பற்றிய கதிர்காமரின் கருத்துக்கள் - இப்போது ஆண்டியின் நிலையிலும் மோசமான நிலைக்கு அவரை இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது.

கதிர்காமர் திருகோணமலையின் பாதுகாப்பு தொடர்பாக தனக்கு சம்பந்தமில்லாத துறையில் கருத்துக்களை வெளியிட்டு, கடற்படையின் இரகசியங்களை பகரங்கமாக்கி சிக்கல்களை ஏற்படுத்திவிட்டார் என்று கடற்படைத் தளபதி விசனம் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆண்டியார் ஆட்டம் கண்டு விட்டார்.

தன்னைப்பாதுகாக்க திருமலையின் பாதுகாப்பு நிலைவர அறிக்கையை கிழக்குப்பிராந்திய கடற்படைத்தளபதியே ஊடகங்கள் மூலம் வெளியிடுமாறு தன்னைக்கேட்டுக்கொண்டார் என அவர் பந்தை தளபதிக்கே எறிந்துள்ளார்.

தளபதி இனி என்ன சொல்லப்போகிறார்.

"சொல்லக்கூடாதவற்றை, சொல்லக்கூடாதவரிடம், சொல்லக்கூடாத சூழ்நிலையில், சொன்னால் கேட்கக்கூடாததையெல்லாம் கேட்கவேண்டியே வரும் " என்கிறார் ஒரு அரசியல் ஆர்வலர்.

-தெருவாசி

# நெல்லுக்கு ஆகக்குறைந்த உத்தரவாத விலை நிர்ணயம்

## நிதித்துறை அறிவிப்பு

(கிளிநொச்சி)

தற்போது வன்னியில் ஒரு மூடை நெல் 650 ரூபாவுக்கு குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதனால் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளோர் முதலீட்டை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை நீக்குவதற்காக, நெல்லுக்கான ஆகக்குறைந்த உறுதியளிக்கப்பட்ட விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுதல் ஒரு கிலோ நெல்லை பதினொரு ரூபா ஐம்பது சதத்திற்கு குறையாத விலையில் கொள்வனவு செய்யுமாறு வாணிபர் அனைவரையும் வேண்டுவதாக நிதித்துறைப்பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி கேட்டுள்ளார்.

அத்துடன் வன்னியில் தேங்கியிருக்கும் சம்பா நெல்லை எளிதாக சந்தைப்படுத்துவதற்காக சம்பா நெல் மீதான ஏற்றுமதித் தீர்வை அறவீடு, டிசம்பர் 31 ஆம் திகதிவரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அதிஉயர் பாதுகாப்பு...

வலி.வடக்கு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கோபி அனானுக்கு அனுப்பிய ஒரு லட்சம் கையொப்பங்கள் அடங்கிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை படையினர் தமிழ் மக்களின் வீடுகள், அவர்கள் வாழ்ந்த இடங்கள், அவர்கள் தொழில்புரிந்த கடற்பிரதேசம் ஆகியவற்றைப் பறித்துள்ளனர்.

இந்த உயர் பாதுகாப்பு வலயத்தினால் தமிழ் மக்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பின்வரும் தகவல்கள் அவற்றை வெளிப்படுத்துகின்றன. இவை வலிகாமம் வடக்கு பகுதியில் யாழ்.மாவட்டத்தின் பிரதேசங்கள்

மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 45. உயர் பாதுகாப்பு வலயம் அமைந்த பிரதேசம் 31. தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தொகை 26000

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட பின்பும், இவை தொடர்ந்தவண்ணம் உள்ளன. தமிழர் வாழும் பகுதிகயில் கடற்கரைப் பிரதேசம் முழுவதும் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இக்கடற்கரைகளில் குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் கடற்தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றார்கள். இச்சமாதான ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்குதலாகும். ஆனால், இரவு கடைப்பிடிக்கப்படவில்லை.

அதிகசெலவில், அதிக உழைப்பில் கட்டப்பட்ட தமது வீடுகளில் வாழும் உரிமைகள் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளாக இவை அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களாக அமைந்திருந்தன. முகாம்களில் மிகவும் நெருக்கமாகவும், அடிப்படை வசதிகள் இல்லாதும் வாழவேண்டியுள்ளது. குறிப்பாக குழுந்தைகளும், முதியோரும் போசாக்கின்மையாலும், நோயாலும் அவதிப்படுகிறார்கள்.

தனிமனித சுதந்திரம், மனித உரிமை மீறல்களாகிய இவற்றை நாம் கருதுகிறோம். இதனால் இம்மக்கள் பிச்சை எடுக்கும் நிலைக்கும், குழப்பம்மிக்க மனப்போக்கிற்கும் தம்மை தயார்ப்படுத்திக் கொள்கின்றனர்.

இப்படிப்பட்ட துன்பங்களை தொடர்ந்தும் அனுபவிக்க முடியாது. நாகரிகமடைந்து உலகும், உங்களின் ஸ்தாபனமும் அமைதியாக மனத்திற்குள் போராடும் மக்களின் அவலங்களையுப் புரிந்துகொண்டு தமது சொந்த இடங்களுக்கு இம்மக்கள் செல்வதற்கு தொழில் செய்வதற்கு மீண்டும் இலங்கை அரசை தூண்டுமாறு தாழ்வாக கேட்டுக்கொள்கிறோம். எங்களின் கருத்துக்களை அதிமேன்மை தங்கிய அனுதாபத்துடன் அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

# திலீபனின் இறுதிநாள் நிகழ்வுகள்; தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகளின் இறுதி நாளில் வர்த்தக நிலையங்களை மூடியும், அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் தமது பணிகளை இடைநிறுத்தியும் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக, யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி

### புலிகளின்.....

டத்தில் கிடைத்து வரும் அங்கீகாரத்துக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகவும், விடுதலைப் புலிகளுடன் கனேடிய அரசாங்கத்திற்கு ஏற்பட்டு வரும் புதிய புரிந்துணர்வின் வெளிப்பாடாகவும் பேராசிரியர் ரெமிலியாட்டின் செயற்பாடு விளக்குவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### யாழ்.நீதிமன்றில்.....

படுத்தும்படி மகஸின் சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

நீதிமன்றக் கட்டளை சென்றடைவதற்கு முன்பாக சந்தேகநபர் யாழ்.சிறைக்கு மாற்றப்பட்டால் அவரை யாழ்.வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியிடம் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென யாழ்.சிறைச்சாலை அதிகாரிக்கும் உத்தரவிட்டுள்ளது.

அடுத்த கட்ட விசாரணை அடுத்த மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், அன்றையதினம் மன்றில் குறித்த சந்தேக நபரை ஆஜர்ப்படுத்தும்படியும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாகவே சந்தேகநபர் திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் தென்மராட்சி, வலிகாமம், தீவகம், நல்லூர் ஆகிய பகுதிகளில் உண்ணா விரதம் நடைபெறவுள்ளது.

யாழ்.நல்லூர் கோட்டம், வலிகாமம் கோட்டம் என்பவற்றுக்கான உண்ணாநோன்பு நிகழ்வு நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலிலும், தீவகக்கோட்ட நினைவு நிகழ்வு புளியங்கூடல் முத்துமாரி அம்மன் முன்றலிலும், தென்மராட்சி கோட்டம்- மீசாலை மாவடிப் பிள்ளையார் முன்றலிலும் வடமராட்சி கோட்டம்- அல்வாய் முதது மாரி அம்மன் கோயில் முன்றலிலும் நடைபெறும். உண்ணா விரத நிகழ்வுகள் அனைத்தும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற பொதுமக்கள், துறை சார்ந்த நிறுவன உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பேரவை கேட்டுக்கொள்கின்றது. அதேவேளை, மேற்குறிப்பிட்ட நிகழ்வு நடைபெறும் இடங்களில் கலை நிகழ்வுகள் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.

### படையினரின்...

நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசியற் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, வவுனியா 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

### யாழ்.போதனா....

மருத்துவ வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவித்த அவர் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் உள்ளிட்ட பல தொண்டமைப்புக்கள் வைத்தியசாலையின் சுமுகமான செயற்பாடுகளை முன்னெடுக்க உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வைத்தியசேவைகள் ஓரளவு திருப்திகரமாக நடைபெற்றுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் உள்ளிட்ட தொண்டமைப்பின் தொண்டர்கள் கணிசமான அளவில் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் இப்போராட்டத்தைக் கைவிடுமாறும் ஊழியர்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்குமாறும் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தவேளை, தியாகி திலீபன் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்திலிருந்து தியாகி திலீபன் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி காலை 8.30க்கு ஆரம்பமாகும். அவ்வூர்தியுடன் பொதுமக்கள் அணிதிரள பேரணியும் நடைபெறும். பேரணி நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலை சென்றடையும்.

இதேவேளை, மேற்படி இடங்களில் நடைபெறும் உண்ணா விரதத்தில் யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

### கனேடிய...

பாரா என்ற கேள்வி அரசியல் அவதானிகள் மத்தியில் நிலவி வருகிறது.

இந்நிலையில் அமைச்சர் பில் கிரஹம் பயணம் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலரி ரேமண்ட், கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிமனையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, அமைச்சர் பில் கிரஹமின் பயணம் பற்றியும், தலைவர் பிரபாகரனைச் சந்திக்கின்ற வாய்ப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டதாகவும்,

அந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் பில் கிரஹம் தனது சுற்றுப்பயணத்தின்போது கிளிநொச்சி வந்து சில மணிநேரங்களைச் செலவிட முடியுமானால் அவரைத் தலைவர் பிரபாகரன் சந்திப்பதில் தடையேதும் இருப்பதாகத் தெரியவில்லை என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இலங்கைக்கு அடுத்தபடியாக அதிகளவு ஈழத்தமிழர்கள் கனடாவிலேயே வாழ்ந்து வருவதைச் சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன், ஈழத்தமிழ் மக்கள் மீது கனடா் காட்டிவரும் அக்கறை மற்றும் நல்லெண்ணத் தின் அடிப்படையில் இந்தச் சந்திப்பு அமையக்கூடும் எனக் கருத்துத் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆசிரியர்களுக்கான மொழித்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு, மலையக ஆசிரியர்களுக்கான மொழித்திறன் போட்டிப் பரீட்சையொன்று இன்று நடைபெறவுள்ளது.

தமிழீழ கல்விக் கழகத்தினால் நடத்தப்படும் இந்த போட்டிப்பரிட்சை வலய ரீதியாக நடைபெறவுள்ளது.

இன்று காலை பத்துமணிக்கு இரண்டு மணிநேர எழுத்துப் பரீட்சை அந்தந்த கல்வி வலயங்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையங்களில் நடைபெறும்.

இம்முறை தேசிய மட்ட பரிசில்களை ஐந்தாக அதிகரித்துள்ளதோடு, வலய மட்டத்தில் கூடுதல் புள்ளிபெறும் மூவருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

MOBILE NET COMPUTER SERVICES MCS
324 Palaly Rd., Jaffna.
BIT 1st Semester New Batch;
Weekend Batch - II
Commence on 28th September at 01.00 p.m
Special offer for the first 10 Joiners
* 50% off in Course Fee
* Free ACS Module
* Free to follow Two Diploma Courses
Printed Notes
Library Facilities
Qualified Lecturer Panel
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project



## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1549 திகதி: 23.09.2003

வெற்றி இலக்கங்கள்

| E | 0 | 5 | 0 | 5 | 7 | 3 |
|---|---|---|---|---|---|---|

(சி-1432)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.